டில்லியில்

# திருமதி இந்திராகாந்திக்கு மாண்புமிகு முதல்வர் நினைவாஞ்சலி



புதுடெல்லியில் 31.10.85 பகல் 1.00 மணியளவில் 'போட் கிளப்' மைதானத்தில அமரா அன்னை இந்திரா காந்தி அவர்களின் முதலாண்டு நினைவு நாள் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி ஆர். அவர்கள் தமிழில் உரையாற்றினார்.

மேடையில் மேதகு துணைக் குடியரசுத் தலைவரும், மாண்புமிகு பிரத்மரும் மற்றும் பல்வேறு மாநில முதல்வர்களும் அமர்ந்திருந் தனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாகடர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆற்றிய உரையின் விவரம்:

"குடியரசுத் துணைத் தலைவர் அவர்களே!

பிரதமர் அவர்களே! அமைச்சர் பெருமக்களே!

மறைந்த அன்னை இந்திரா அம்மையாரின் நினைவுக்கு நாடு இன்று அஞ்சலி செலுத்துகிறது.

தமிழ்நாட்டின் சார்பில் நான் எனது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

அன்னை இந்திரா உலகத் தலைவர் உலக அமைதிக்கு அயராது பாடுபட்டவர்.

நமது நாட்டு ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தவர்.

நாட்டு ஒற்றுமைக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர்.

நான் நோயுற்று இருந்தபோது தாயன்புடன் சிகிச்சைக்காகச் சகல வசதிகளும் செய்தவர். அவருடைய மறைவு என் இதயத்தில் நீங்காத வடுவை ஏற்படுத்தி உள்ளது. நான் நலம் பெற பிரதமர் ராஜீவ் காந்தி எடுத்த முயற்சிக்கும் காட்டிய அன்புக்கும் ஆதரவுக்கும் எப்பொழுதும் கடமைப்பட்டுள்ளேன்.

வலிமை மிக்க ஒன்றுபட்ட இந்தியாதான் அன்னை இந்திராவிற்கு உண்மையான நினைவுச்



சின்னம். பிரதமர் ராஜீவ் காந்தியின் தலைமையில் வளமான இந்தியாவை உருவாக்குவோம். அதற்காக அன்னை இந்திரா காந்தியின் பெயரால் சபதம் ஏற்போம்."

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - கார்த்திகை 1

மலர் : 16 இதழ் : 10

16-11-1985

# பண்டித நேருவின் வாழ்க்கைக் குறிப்புகள்



1889 நவம்பர்த் திங்கள் 14 ஆம் நாள் மோதிலால் நேருவுக்கும் சொரூப ராணிக்கும் அலகாபாத்தில் பிறந்தார் ஜவகர்லால் நேரு.

1905 மே திங்களில் இங்கிலாந்தில் ஹாரோ பள்ளியில் சேர்ந்தார்.

1910 பட்டப் படிப்பை முடித்து, சட்டப் படிப்பைத் தொடர்ந்தார்.

1912 வழக்கறிஞராகி இந்தியா திரும்பினார்; பங்கிபூர் காங்கிரசில் பார்வையாளராகக் கலந்து கொண்டார்.

1915 காங்கிரசின் சார்பில் முதன் முறையாக மேடை ஏறிப் பேசினார்.

1916 பிப்ரவரி 8ல் கமலாவை மணந்தார். டிசம்பாரில் காந்தியடிகளுடன் முதல் சந்திப்பு.

1917 நவம்பர் 19ல், ஒரே மகளான இந்திரா பிறந்தார்.

1919 மோதிலாலுடன் சேர்ந்து 'இண்டிபெண்டன்ட்' என்ற செய்தி இதழைத் தொடங்கினார்.

1921 கிசான் கிளர்ச்சியில் ஈடுபட்டார்; வேல்ஸ் இளவரசர் வருகையின்போது கடையடைப்பு நடத்தத் திட்டமிட்டதற்காக, டிசம்பர் 6ல் கைது செய்யப்பெற்று, ஆறு மாதச் சிறைத் தண்டனை அடைந்தார்.

1925 அலகாபாத் நகராட்சித் தலைவரானார்; பின்னர் அப் பதவியைத் துறந்தார்.

1927 நவம்பரில், மாஸ்கோவில் நடைபெற்ற ருசியப் புரட்சியின் 10 ஆம் ஆண்டு விழாவில் கலந்து கொண்டார். 'சோவியத் ருஷ்யா' என்ற நூலை எழுதினார். டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற 2வது காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார்.

1930 ஏப்ரல் 14ல் உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதனால், ஆறு மாதச் சிறைத் தண்டனை பெற்றார்.

1931 பிப்ரவரி 6ல் மோதிலால் மறைவு.

1934 ஜனவரி 1ல் மகளுக்கு, கடிதங்கள் வாயிலாக 'உலக வரலாறு' என்னும் நூலை எழுதி முடித்தார்.

1935 பிப்ரவரி 14ல், 'தன் வரலாற்றை' எழுதினார். செப்டம்பர் 4ல் மனைவி மிகவும் உடல் நலம் குன்றியதால், அவரைப் பார்ப்பதற்காக, விடுதலை பெற்று ஐரோப்பா சென்றார். வெளிநாட்டிலிருக்கும் போதே காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

1936 பிப்ரவரி 28ல் கமலா நேரு சுவிட்சர்லாந்தில் காலமானார். ஜூன் 2ல் இந்திய அரசியல் சட்டத்தின் மாதிரிப் படியை உருவாக்கினார்.

1938 நேருவின் தாயார் சொரூபராணி மறைவு.

1939 சுபாஷ் சந்திர போஸுக்கும் காந்தியடிகளுக்கும் இடையில் எழுந்த வேறுபாட்டைப் போக்க முயன்றார்.

1940 இந்தியரைக் கேட்காமலே 'உலகப் போரில் இந்தியா கலந்து கொள்ளும்' என்று ஆங்கில அரசு அறிவித்ததனால் எழுந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டமைக்காக அக்டோபர் 31ல் கைது செய்யப்பெற்று, இரண்டாண்டு சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றார்.

1941 டிசம்பரில் விடுதலை பெற்றார்.

1942 ஜனவரி 1ல், 'நேருவே என் வாரிசு' என்று காந்தியடிகளால் புகழ் மாலை சூட்டப் பெற்றார்.

ஆகஸ்ட் 7ல் பம்பாய் காங்கிரஸில் 'வெள்ளையனே வெளியேறு' என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியதனால் ஆகஸ்ட் 8ல் கைதானார். நீண்ட காலம் சிறைவாசம் பெற்றார்.

1944 ஏப்ரல் 13ல் 'இந்தியாவின் கண்டு பிடிப்பு' என்ற நூலை . சிறையிலே எழுதத் தொடங்கி, செப்டம்பரில் முடித்தார்.

945 ஜூலை 17ல், முஸ்லீம் லீக் கேட்ட பாகிஸ்தான் பிரிவினையை வீண்மையாகக் கண்டித்தார். பொதுத்தேர்தலில் ஈடுபட்ட காங்கிரசுக்கு முழுமூச்சுடன் தொண்டு செய்தார்.

1946 மார்ச்சுத் திங்களில், 'இந்தியாவின் கண்டுபிடிப்பு' நூலை வெளியிட்டார். ஆகஸ்ட் 12ல், இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு, வைஸ்ராய், நேருவிடம் கேட்க, அவர் ஒப்புக் கொண்டார்.

1947 ஆகஸ்ட் 15ல் இந்தியா சுதந்திரம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரானார்.

1948 ஜனவரி 30ல், காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்; நேரு கண்கலங்கினார். வானொலியில் உருக்கமாக உரையாற்றினார்.

ஆகஸ்ட் 20ல் அணுசக்திக் குழுவின் முதற் கூட்டத்தைத் துவக்கினார்.

1950 ஜனவரி 26ல் இந்தியா குடியரசு நாடு ஆயிற்று.

மார்ச்சுத் திங்களில் இந்தியத் திட்டக் குழுவைத் தொடங்கினார். ஜூலை 14ல் கொரியப் போரை நிறுத்தச் சொல்லி மூன்று வல்லரசுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

1953 ஜூன் 25ல் சீனப் பிரதமர் சூ-என்-லாயை வரவேற்றார். 'பஞ்சசீலம்' என்னும் ஐந்து கொள்கைகளை விளக்கினார்.

1955 ஜூலை 15ல் 'பாரத ரத்னா' விருது பெற்றார்.

1957 ஜனவரி 12ல் நாளந்தாவில் புத்தரின் 2,500-வது ஆண்டு விழாவில் பங்கேற்றார்.

1962 டிசம்பர் திங்களில், கோவா மக்களைப் போர்ச்சுக்கீசியரின் பிடியிலிருந்து விடுதலை பெறச்செய்தார்.

1964 ஜனவரியில், புவனேஸ்வரத்தில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபொழுது நோய் வாய்ப்பட்டார். சிகிச்சைக்குப் பின் நலம் பெற்றார்.

மே 27 புதன் கிழமை காலை 6.20 மணிக்கு மீண்டும் நோய்வாய்ப்பட்டார். குருதிக் குழலில் கோளாறு ஏற்பட்டதனால், பகல் 2 மணிக்கு உயிர் துறந்தார்.

## எட்டில் ஒரு பகுதி வாழ்நாள் சிறைச்சாலையிலே!

இந்தியாவின் சுதந்திரத்திற்குப் போராடியதற்காக, ஜவகர்லால் நேரு அவர்கள், தம் வாழ்நாளில் 3,262 நாட்கள் (9 ஆண்டுகளுக்கு 23 நாட்களே குறைவு) சிறைத் தண்டனை அனுபவித்துள்ளார். இச் சிறைத் தண்டனையை அவர் 9 தடவைகளில் பின்கண்டவாறு அனுபவித்துள்ளார்.

| சிறைப்பட்ட காலம் | | | நாட்கள் | சிறைவாசம் அனுபவித்த இடம் |
|---|---|---|---|---|
| 6.12.1921 | - | 3. 3.1922 | 87 | லக்னோ மாவட்டச் சிறை |
| 11. 5.1922 | - | 31. 1.1923 | 265 | லக்னோ மாவட்டச் சிறை |
| 22. 9.1923 | - | 4.10.1925 | 12 | நாபா சிறை |
| 14. 4.1930 | - | 11.10.1930 | 180 | நைநி மத்திய சிறை, அலகாபாத். |
| 19.10.1930 | - | 26. 1.1931 | 99 | நைனி மத்திய சிறை |
| 26.12.1931 | - | 30. 8.1933 | 612 | நைனி மத்திய சிறை, பரேலி மாவட்டச் சிறை, பஞ்சாப், டேராடூன் சிறை, (உ.பி.) |
| 12. 2.1934 | - | 4. 9.1935 | 569 | மாநிலச் சிறை, கல்கத்தா, அலிப்பூர் மத்திய சிறை, கல்கத்தா, டேராடூன் சிறை, நைனி மத்திய சிறை, அல்மோரா மாவட்டச் சிறை (உ.பி.) |
| 31.10.1940 | - | டிசம்பர் 1941 | 398 | கோரக்பூர் சிறை (உ.பி.) |
| 9. 8.1942 | - | 15. 6.1945 | 1040 | அகமத் நகர்கோட்டை, பம்பாய். |

இப் புள்ளி விவரங்களில் இருந்து கணக்கிட்டால், 74½ ஆண்டுக்காலம் வாழ்ந்த ஜவகர்லால் நேரு அவர்கள், தம் வாழ்நாளில் ஏறத்தாழ எட்டில் ஒரு பகுதியைச் சிறைச் சாலையிலேயே கழித்துள்ளார் என்பது புலனாகின்றது. இச் சிறைவாச காலத்திலேயே ஜவகர்லால் நேரு அவர்கள் - 'என் சுய சரிதை' (My Autobiography', 'உலக சரிதம்' (Glimpses of world Histroy), 'இந்தியாவின் கண்டுபிடிப்பு' (The Discovery of India) ஆகிய உலகப் புகழ் பெற்ற நூல்களை எழுதினார் என்பது குறிப்பிடத் தக்கது.

# கவிஞர் போற்றும் சிதம்பரனார்



தோற்றம்: 5-9-1872 - மறைவு :18-11-1936

வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதைவிரைவிற் கேட்பாய்நீ
வருந்தலைஎன் கேண்மைக் கோவே!
தாளாண்மை சிறிதுகொலோ யாம்புரிவேம்
நீஇறைக்குத் தவங்கள் ஆற்றி,
வேளாண்மை நின்துணை வர் பெறுகெனவே
வாழ்த்துதிநீ வாழ்தி! வாழ்தி!!

—சுப்பிரமணிய பாரதியார்

எல்லாரும் தேசபக்தர் இந்த நாளில்;
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க் காண்பார்!
சொல்லாலும் எழுத்தாலும் விளக்க வொண்ணாத்
துன்பமெல்லாம் சிறைவாசம் அந்த நாளில்!
வல்லாளர் சிதம்பரனார் சிறையிற் பட்ட
வருத்தமெலாம் விரித்துரைத்தால் வாய்விட் டேங்கிக்
கல்லான மனத்தவரும் கண்ணீர் கொட்டிக்
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்!

—நாமக்கல் கவிஞர்

'அஞ்சுவனோ! வெள்ளையரின் ஆட்சியொழிப் பேன்' என்று
வஞ்சினம் கூறிநின்ற மாவீரன் - விஞ்சுபுகழ்
செந்தமிழ்ச் செம்மல் சிதம்பரப்பேரண்ணலை நாம்
வந்தனை செய்வோம் மகிழ்ந்து!

கைநோவக் கால்நோவக் கல்லுடைத்துச் செக்கிழுத்து
மெய்சேர்ந்தும் ஊக்கம் விடாதுநின்ற - ஐயன்
சிதம்பரம் அன்றுசிறை சென்றிலனேல், இன்று
சுதந்திரம் காண்பாயோ சொல்!

கப்பலை ஓட்டிக் கடுங்காவற் காளாகி
உப்பிலாக் கூழ்உண் டுடல்மெலிந்தோன்- ஒப்பிலாத்
தென்னாட்டு வீர திலகன் சிதம்பரத்தின்
நன்னாமம் வாழ்த்துகஎன் நா!

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

## வ.உ.சி.யின் எழுத்தோவியங்கள்

**எழுதிய நூல்கள்:**

1. மெய்யறிவு
2. மெய்யறம்
3. எனது பாடல் திரட்டு
4. வ.உ.சி. கண்ட பாரதி
5. சுயசரிதை

**மொழிபெயர்ப்பு நூல்கள்:**

1. மனம்போல வாழ்வு
2. அகமே புறம்
3. வலிமைக்கு மார்க்கம்
4. சாந்திக்கு மார்க்கம்

**உரை எழுதிய நூல்கள்:**

1. இன்னிலை
2. திருக்குறள்
3. சிவஞான போதம்

**பதிப்பித்த நூல்கள்:**

1. தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் (இளம்பூரணர் உரை)
2. தொல்காப்பியம்-சொல்லதிகாரம் (இளம்பூரணர் உரை)
3. சிவஞான போதம்

**அச்சு வடிவில் வந்த அரசியல் சொற்பொழிவு:**

எனது அரசியல் பெருஞ்செயல்

**நடத்திய ஏடுகள்:**

1. விவேகபாநு
2. தமிழ் நேஷனல் பத்திரிகை
3. இந்துநேசன்

**அச்சில் வராத நூல்கள்:**

1. அழகும் ஆரோக்கியமும்
2. ஆயுள் நீடிக்கும் ஆறு
3. ஊழை வெல்ல உபாயம்
4. சிவ மதம்
5. விஷ்ணு மதம்
6. புத்த மதம்
7. இஸ்லாம் மதம்
8. கிறிஸ்து மதம்
9. மனித மதம்
10. முக்தி நெறி
11. The Universal Scripture
12. திருக்குறள்—மணக்குடவர் உரை (பொருள்)
13. திருக்குறள்—மணக்குடவர் உரை (இன்பம்)
14. திலக மகரிஷி




# நதி நீர்ப் பங்கீட்டு மாநாடு

புதுடெல்லியில் 30-10-85 அன்று நடைபெற்ற நதிநீர்ப் பங்கீடு பற்றிய மாநாட்டில் கலந்து கொண்டார் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர்.

29ஆம் தேதியன்று இரவு, மாண்புமிகு மத்திய நீர்வளத் துறை அமைச்சர் திரு சங்கரானந்த் அவர்கள், மாண்புமிகு முதல்வருக்குச் சிறப்பு விருந்தொன்று அளித்தார்.

மறுநாள் நடைபெற்ற நதி நீர்ப்பங்கீடு குறித்த கூட்டத்தில்-மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு ஒய்.எஸ்.எம். யூசுப், அரசுத் தலைமைச் செயலாளர், திரு டி.வி. அந்தோணி, பொதுப்பணித் துறைச் செயலாளர் திரு எச்.பி. என். ஷெட்டி ஆகியோரும் பங்கேற்றார்கள்.

இந்தியப் பிரதமரும், நீர்வளக் கவுன்சில் தலைவருமான திரு ராஜீவ் காந்தி இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

''நீர் வளத்தை நம்மால் முழுமையாகப் பயன்படுத்த இயலவில்லை. சிறந்த முறையில் நீரைப் பயன்படுத்திக் கொள்ள நம்மிடையே ஒத்துழைப்புஏற்படுத்திக் கொள்ளக்கூட நம்மால் இயலவில்லை. இதற்கான கொள்கையும் வகுக்கப்படவில்லை. நீரைப் பயன்படுத்திக் கொள்ளப் பெரிய திட்டம் ஒன்றும் வடிவமைக்கப்படவில்லை. நமது மாநிலங்கள் தம்முடைய ஆறுகள் குறித்த மிகப் பெரிய பிரச்னைகளை இன்னமும் தீர்க்காமலே வைத்துள்ளன. பல மாநிலங்களில் மிகுதியான நீர்ப்பாசனத்திற்குப் பயன்படாமல் வீணாகிறது. சில மாநிலங்களில் தண்ணீர் வீணே கடலில் போய் விழுகிறது.

''இப்போது நாம் 40 சதவீத நீரை மட்டுமே பயன்படுத்தி வருகிறோம். நமக்குக் கிடைத்திருக்கும் நீர்வளம் முழுவதையும் பயன்படுத்திக் கொள்ளும்திறனை நாம் பெற வேண்டும்.''

-இவ்வாறு அக்கூட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

''சில மாநிலங்கள் ஏராளமான நீர்வசதியைப்பெற்றிருக்கின்றன. அதே நேரத்தில் வேறு சில மாநிலங்களில் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. எனவே நதி நீரைப் பங்கீடு செய்து கொள்ள மாநிலங்களுக்கிடையே ஒத்துழைப்புத் தேவை. கோவை நகரத் தண்ணீர்ப் பற்றாக்குறை நீங்க சிறுவாணி அணை கட்டப்பட்டபோது கேரள அரசு சிறந்த ஒத்துழைப்புத் தந்தது. அதே மனப்பான்மையை இப்போது கேரளாவில் உள்ள கூடுதல் நதி நீரை வழங்குவதிலும் அம்மாநில அரசு காட்ட வேண்டும்.

தனது தண்ணீர்ப் பற்றாக் குறையைத் தீர்க்க தமிழ்நாடு அண்டை மாநில உதவிகளை எதிர்நோக்குகிறது. ஆந்திரா, கர்நாடகம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்கள் கிருஷ்ணா நதிநீரை உதவ முன்வந்துள்ளன. ஆனால் இப்போது அத்திட்டத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. பிரதமர் தலையீட்டால் இப்பிரச்னை விரைவில் தீரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.''

—என்று தமது உரையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.

மாண்புமிகு மத்திய நீர்வளத் துறை அமைச்சர் திரு சங்கரானந்த் பேசுகையில் - ''நீர்வளத்தைப் பாதுகாத்து அதைத் திறம்பட நிர்வகிப்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். தேசிய நீர்வளத் திட்டங்களைத் தயாரிக்க மாநிலங்களின் நிபந்தனையற்ற ஒத்துழைப்புத் தேவை'' என்றார்.

இம்மாநாட்டில் - மாண்புமிகு கேரள, ஆந்திர, கர்நாடக முதலமைச்சர்களும் கலந்து கொண்டார்கள்.



# கல்வி - ஒரு சவால்....

சுதந்திரத்திற்குப் பின் இந்தியா பல்வகைக் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையிலாகட்டும், மாணவர்கள் சேர்க்கையிலாகட்டும், கல்வி திட்ட வளர்ச்சிகளிலும்பிரிவுகளிலுமாகட்டும் - மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை மறுக்க இயலாது. ஆயினும் இன்று அனைவருக்கும் கல்வி, சமமான பங்கீடு, தரமான கல்வி என்பவற்றில் நாட்டின் ஆவல்களைப் பூர்த்தி செய்யவில்லை என்பது உண்மை.

நமது இந்தியப் பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் பொறியாளர்களையும், தொழில் நுட்ப வல்லுநர்களையும் மருத்துவர்களையும் மேலாண்மையாளர்களையும் ஏனைய உலகப் பல்கலைக் கழக மாணவர்கட்கு ஒப்பாக உருவாக்கியுள்ளன என்பதனை மறுப்பதற்கில்லை. ஆயினும் இந்த ஒரு சிறுபான்மையினரான, தரமான மாணவர்களைத் தவிர நம் உயர் கல்விக்கூடங்கள் பெருவாரியான புத்தகப்புழுக்களான பட்டதாரிகளை, தானாகக் கற்கும் தகுதியில்லா, கருத்துக்களைச் சரிவர வெளியிட இயலா, சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தான் ஆற்றவேண்டிய பொறுப்புக்களை உணராப் பட்டதாரிகளையும் உருவாக்கியுள்ளன என்பது உண்மையே.

ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., மருத்துவக் கல்லூரிகள் போன்ற சீரிய கல்வி நிறுவனங்களில் தாம் அதிகம் செலவு செய்யாது பயிற்சிபெற்று வரும் கூரிய மதி படைத்த நன் மாணாக்கர்

களிடம் கூட சமுதாயத்திற்குத் தாம் கடப்பாடுடையவர் என்ற பொறுப்புணர்ச்சி இருப்பதாகத் தெரியவில்லை. நல்ல பள்ளிகளில் இருந்து வருவோரும் அவ்வாறேயுள்ளனர். உண்மையில் இந்தப் பிரச்னை நன்கு இயங்கும் பள்ளிகளில்தான் கடுமையாக உள்ளது. சமுதாயத்திற்கு உரிய தன் கடமையுணர்வு என்னவென்பதை மாணவர்கட்குப் புகட்டுவதில்லை.

இதன் விளைவு என்னவென்றால், சரியான பருவத்தில் நலிந்தோரிடமும் வறியோரிடமும் இரக்கம் காட்ட வேண்டும் என்பதைக் கற்கும் வாய்ப்பை இழந்ததோடு மட்டுமல்லாமல் ஒருவகையான போலிப் பெருமிதத்தைப் பெற்றுத் தம்மைச் சுற்றுச் சூழலின் உண்மையிலிருந்து விலக்கிக் கொள்கிறார்கள்.

அடுத்து-தேர்வுமுறை பற்றிக் கூறாவிட்டால், தற்காலக் கல்வி காட்சி வருணனை முழுமையாகாது. ஏனென்றால் மாணவர்களின் விதியை மட்டுமல்லாமல் பாடப் பொருளையும், போக்கையும் எல்லா நிலைகளிலும் கல்வியின் தன்மையையும் தேர்வுகள்தான் முடிவு செய்கின்றன. மாணவர்களை மதிப்பிடுவது அவர்தம் மனப்பாடம் செய்யும் திறமையைக் கொண்டுதான் என்பதோடு குறிப்பிட்ட ஆண்டிறுதியில் தேர்வு வருவதால் அவர்கள் காலம் அனைத்தையும் விரயமாக்கிவிட்டு ஆண்டிறுதியில் மூன்று நான்கு மாதங்களில் மட்டும் உழைக்கின்றனர். ஆகவே, தாங்கொணா நெருக்கடியில், இறுதியில் உழைக்கையில் பாடங்களின் தொடர்புகளை இழந்துவிட்டு தேர்வுகளைப் புறக்கணிப்பதிலும் வினாத் தாள்களை முன்னரே அறிவதிலும், மொத்தமாகப் பார்த்தெழுதுவதிலும், கண்காணிப்பாளர்க்குக் கையூட்டுக் கொடுப்பதிலும் ஏனைய முறைகேடான வழிகளிலும் ஈடுபடுகின்றனர்.

அதன் விளைவாகப் பட்டங்களும், கல்வித் தகுதிகளும், பொதுமக்களுக்கு நம்பிக்கையைத் தருவதில்லை. அரசு மற்றும் தனியார் வேலை வாய்ப்பு நிறுவனத்தாருக்கும் நம்பிக்கை அளிப்பதில்லை. உயர்கல்வி முழுவதுமே சிதைந்து, பயனற்றதாகி திசைமாறி, வேலை செய்யத் தகுதியில்லாத இளம் ஆண்களையும் பெண்களையும் உருவாக்கியுள்ளது.



பொது வாழ்க்கையில்ஏற்படுகின்ற குறைபாடுகளினாலும், பண்பாட்டுக் குறைவினாலும், பல நிலைகளில் வாழும் சிந்தனையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். வாழ்வின் பிற நிலைகளில் காணப்படும் இந்தப் பண்பாட்டுக் குறைவானது பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களிலும் குறிப்பாக ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியிலும் பரவி இருப்பது மிகவும் ஆபத்தான வளர்ச்சியாகும்.

இந்த நிலைமாற புதிய கல்வி முறையை வலியுறுத்தியாக வேண்டும். சுரண்டல், பாதுகாப்பின்மை, கொடூரத்தன்மை போன்ற செயல்கள் வளர்ந்து வரும் சமுதாயத்துக்கு ஒவ்வாதவை என்பதை இளைய சமுதாயத்தினர் உணரும்படிச் செய்ய வேண்டும். அவர்கள் சமூக அரசியல் பொருளாதாரப் பண்பாடுகளை மேற்கொள்ளும்படி வலியுறுத்தப்பட வேண்டும். அத்துடன் அறிவு, அறிவியல், வாழ்க்கை நெறி முதலியவைகளை வளர்க்கும் அடிப்படைத் தன்மைகொண்ட கல்வி முறைகளின் வழியாக தகுதியான, நடைமுறைக்கேற்றவாறு மாற்றியமைக்கப்பட்ட வேண்டிய மதிப்பீட்டு முறை புகுத்தப்பட வேண்டும் என்பது கடந்தகால அனுபவங்களின் படிப்பினையாகும்.

இந்தியத்துணைக் கண்டம் பல்வேறு வகையான கலாச்சாரங்களைப் பின்பற்றிய போதிலும், சுதந்திரப் போராட்டத்தின் காரணமாக அதன் அரசியல் ஒற்றுமை வலிமையுடையதாய் இருந்தது. ஆனால்-இந்த தேசிய ஒருமைப்பாடு தற்போது சாதி, மத, வட்டார உணர்வு போன்ற சக்திகளினாலும் சீர்குலைந்து வருகிறது. எனவே சுதந்திரப் போராட்டம், தேசீய ஒற்றுமையின் மதிப்பு சாதி, மத வேறுபாடுகளால் ஏற்படும் ஆபத்துக்கள், பல்வேறு சூழ்நிலைகளினால் அழிந்து வரும் இந்தியக் கலாச்சாரங்களை நெறிப்படுத்துதல் முதலியவைகளை வலியுறுத்துகின்ற கல்வி முறையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் பரவியுள்ளது. தற்போதைய கல்வி முறை தோல்வியுற்றுவிட்டது என்பதையே நாட்டின் இன்றைய நிலை தெளிவாக உணர்த்துகிறது.

இனிவரும் புதிய தலைமுறையாவது இந்தச் சூழ்நிலைகளில் இருந்து மாறுபடுவதற்கேற்ற தடுப்புமுறை கையாளப்பட வேண்டும்.

தன்னம்பிக்கை உணர்வின்றி எந்த ஒரு மனிதனும் அல்லது ஒரு நாடும் முன்னேறியதில்லை. முன்னேறிய நாடுகள் பலவற்றில் சிறந்து விளங்கிய பல மனிதர்களைப்போல் இந்தியர்களும் அவர்களுடைய செயலிலும், திறமையிலும் சிறந்து விளங்கினர். விளங்கி வருகின்றனர் என்பதை வெகு சிலரே அறிந்திருக்கின்றனர். கையில் திருவோடு வைத்துக் கொண்டு பிறரை எதிர்பார்க்கும் நிலையில் இந்தியா இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டிற்குள் நுழையக்கூடாது. இதற்கு, இளைய சமுதாயத்தினர் அவர்களுடைய உள்ளாற்றலை அறியும்படி செய்யும் கடமையை உணரும்படி உடனடியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நமது இந்திய நாட்டில் மிகக் கடுமையான எண்ணம் ஒன்று உருவாக்கப்படுகின்றது. பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்

களில் இருந்து வெளிவருகின்ற இளைய சமுதாயத்தினர் ஒவ்வொருவரும், உடல் உழைப்பினை ஈடுபடுத்திச் செய்யப்படும் தொழிலினைத் தாழ்வாகவும், அலுவலகங்களில் பணிபுரியும் எழுத்தர்கள் பணியை உயர்ந்ததாகவும் கருதுகின்றனர். நவீன தொழில்முறைகளை உருவாக்குவதில் உலகின் பிற நாடுகளுடன் போட்டி போட்டு முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்ற ஒரு சமுதாயத்தில் இத்தகைய பிரபுத்துவ நோக்கமானது அச்சமுதாய முன்னேற்றத்துக்குக் கடுமையான தடையை உண்டு பண்ணும். இதுபோன்ற தடைகளை முறியடித்து முன்னேறி வரும் பல நாடுகளைப் போல, இந்தியர்களும் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளனர். இது எப்படிச் சாத்தியமாகும்? ஒவ்வொருவரும் உழைப்பின் மதிப்பை உணர்ந்து, பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும்போது தன்னுடைய கரங்களினால் பயனுள்ள உழைப்பை வெளிப்படுத்துகின்ற அளவில் தொழில் கல்வி பெற்றுவருவதைப் பொறுத்தே சாத்தியமாகும்.

இதற்கு உயர் கல்வி முறையை உருவாக்கும் மையங்கள் நவீனப்படுத்தப்பட வேண்டும். மாற்றத்தை வலியுறுத்துகின்ற, தெளிவாக்குகின்ற, மனிதனுடைய சுய ஆற்றலை வெளிக் கொணர்கின்ற மாறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற கல்விமுறையை உருவாக்கும் புதிய மையங்கள் அமைக்கப்பட வேண்டும். நவீன அறிவியல் விழிப்புணர்வுடன் முழுச் சூழ்நிலையையும் பரவலாக மாற்ற வேண்டிய எண்ணத்தையும் உறுதிப்படுத்தியாக வேண்டும். அப்படித் தகுதியான சூழ்நிலை மாற்றங்களை ஏற்படுத்தத் தவறினால், பழமைசார்ந்த மெதுவாகச் செல்லும் மனம் படைத்த, எதையும் சகித்துக் கொள்கின்ற மக்கள் தொகையின் ஒரு பிரிவினரால் நவீன கல்வி மையங்கள் ஒதுக்கப்பட்டுவிடும்.

கல்வி முறை நெட்டுருவாகக் கற்றலையும் ஒரேவகைப் பயிற்சிகளையும் வற்புறுத்தும் வகுப்பு வேலைகளையும் தேர்வுகளையும் சிறப்பான குணங்களாகக் கொண்டுள்ளதால் அதிகமான மாணவர்கள் தங்களிடையே மறைந்திருக்கும் உருவாக்கும் மற்றும் புதுமைத் திறன்களை வெளிக்கொணரும் சவால்களை ஏற்றிருக்க மாட்டார்கள். ஐயமற இது கற்பிக்கும் முறையிலும், பாடத் திட்டத்திலும் பாடப் புத்தகத்திலும் தேவையான சீர்திருத்தத்தைக் குறிக்கிறது. இது மட்டும் போதுமானதல்ல. புதுப்பித்தலும், வேலைக் கோட்பாடுகளும் ஆசிரியர்களின் அறிவு மற்றும் திறமைகளும் மாற்றப்பட வேண்டும். ஆசிரியர்கள் கற்கும் சூழலில் இன்னும் அதிகமாக உருவாக்கும் நோக்கத்தோடு பங்கேற்க வேண்டும். இதில் அவர்கள் புதிய கருத்துக்களுடன் தொழில் நுட்பங்களுடனும் இடையறாது போராட வேண்டும்.

கல்விக்காகப் பணிக்கப்பட்டுள்ள பல்வேறு வேலைகளைக் கவனத்திற் கொண்டோமானால் குழந்தைகள் தங்கள் வயதுக்கேற்ற கல்வி நிகழ்ச்சிகளில் பங்கேற்றால் அன்றி நம்முடைய மனித சக்திகேற்ற நாட்டை உருவாக்கும் பணியானது சாத்தியமாகாது. எல்லாருக்குமான துவக்கக் கல்வியை அடைதல் என்பது இன்னும் ஒரு தேர்ந்தெடுக்க வேண்டிய விஷயம் அல்ல. அனைவரும் தொடக்கக் கல்வியை அடைவது என்பது கல்வி கற்பிக்கும் முறை மற்றும் பாடப் பொருளின் பொருத்தம் மட்டுமல்லாமல் பெற்றோர் ,கல்வி மதிப்பைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தையும்



பொறுத்து உள்ளது. எனவே முதியோரை ஈடுபடுத்தும் செயல்முறைக்கேற்ற கல்வியை அளிக்க மாபெரும் செயல்முறைத் திட்டம் ஒன்று துவக்கப்பட வேண்டும்.

முன்னேற்றத்தில் மாநிலங்கள் முக்கியப் பங்கேற்கும் ஓர் அரசியலமைப்பின்படி கல்வியின் வெவ்வேறு மட்டத்திலும் மைய மற்றும் மாநில அரசுகளின் பொறுப்புகளை அறுதியிட்டுக் கூறுவது அவசியம்.

கல்வி தற்போது பொதுப் பட்டியலில் வந்துள்ளதால் இதன் அவசியம் அதிகம். இத்தறுவாயினால் எல்லா வளங்களைப் பற்றியும் அவற்றை வெவ்வேறு நிர்வாக மட்டங்களில் ஒப்படைப்பைப் பற்றியும் கவனிக்க வேண்டும்.

ஆகையால் புதிய கல்விக் கொள்கையானது கல்விக் கட்டளைகளை நோக்கம், கருத்து முன்னுரிமை இவற்றின் மூலமாக மட்டுமல்லாமல் கல்விக் கொள்கையில் கூறப்பட்டுள்ள நீண்டகால குறுகிய கால நோக்கங்களை அடையக்கூடிய செய்முறை சாத்தியக் கூறுகளைக் கூறவேண்டும். இச்சாத்தியக் கூறுகள் பண தளவாட நிர்வாக, மனிதத் தேவை இவற்றைச் சார்ந்து இருக்கவேண்டும். கல்விக் கொள்கையில் அடிப்படை மாற்றம் அமைக்க வேண்டுமென்றால் அதற்கு நடைமுறை உருவம் அமைக்க மாபெரும் நிர்வாக அமைப்புகளைத் திட்டமிடவேண்டும்.

ஒரு தேசிய கல்விக் கொள்கையானது அதனை அமுல்படுத்துவோர்களின் கருத்துக்கள், அறிவு, பங்கேற்பு இவற்றின் மூலம் உருவாக்கப்பட வேண்டும். மாறிய சுயாட்சி நிறுவனங்கள், தானே முன்வரும் முகமைகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், விஞ்ஞானிகள், நிர்வாகிகள், தொழில் முனைவர், தொழிலாளிகள், சட்டசபை அங்கத்தினர்கள் மேலும் பத்திரிகையாளர்கள் இவர்கள் அனைவரும் இக்கொள்கை உருவாகும் பொழுது தங்களுடைய கருத்துக்களை அளிக்க வேண்டும்.

—புதிய கல்விக் கொள்கை பற்றிய இந்தக் கட்டுரை 'இந்தியக் கல்வி' அமைச்சக வெளியீட்டின் ஒரு பகுதியாகும்.

புதிய கல்விக் கொள்கை பற்றிய கருத்தரங்குகள் தமிழகமெங்கும் நடைபெற்று வருகிறது. மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா, மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம், முன்னாள் அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் முதலான பலரும் அக்கூட்டங்களில் பங்கேற்றுக் கருத்தறிவித்தார்கள்.

கல்வித்துறையிலே விரைவில் புதியதோர் மறுமலர்ச்சி ஏற்படப் போவது திண்ணம்.

மீண்டும் மதங்கள் அண்டா நெருப்பாய் இருந்தவர்; படரும் சாதிப் படைக்கு மருந்தாய்த் திகழ்ந்தவர்; தூய தாடி மார்பில் விழும் தொண்டு செய்து பழுத்த பழம் தந்தை பெரியாருக்குத் தமிழகம் ஓராண்டுக் காலம் நூற்றாண்டு விழாக் கொண்டாடி மகிழ்ந்தது. நம் நெஞ்சமெல்லாம் நீங்கா நினைவாய் நிலைத்திருக்கும் அந்தப் பகுத்தறிவுப் பகலவன் கேரள மாநிலத்திலே உள்ள வைக்கத்தில் சாதிப்பேயை ஓட்ட நடத்திய போராட்டம் - தீண்டாமையை விரட்ட செய்த சத்தியாக்கிரகம் - அதன் மூலம் பெற்ற பெருவெற்றி சரித்திரப் பிரதித்தி பெற்றதாகும்.

அதன் நினைவாக, சுயமரியாதைச் சுடர்கொளுத்திய ஈரோட்டுச் சிங்கத்திற்கு வைக்கம் நகரில் ஓர் நினைவகம் அமைக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டுள்ளது தமிழ்நாடு அரசு. அதற்கான நிலத்தைக் கேரள அரசு நமக்கு வழங்கும் விழாவும், நினை

# வைக்கம் நகரில் பெரியார் நினைவகம்




வகத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவும், அவர் உதிர்த்த முத்துக்களின் ஆங்கில ஆக்க நூல் வெளியீட்டு விழாவும் ஒரு சேர 3.11.85 அன்று வைக்கம் நகரிலே சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் சார்பிலே மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், கேரள அரசின் சார்பிலே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு பி.ஜே. ஜோசப் அவர்களும் அன்றைய விழாவிலே முக்கியப் பங்கு வகித்தனர்.

தந்தை பெரியார் அவர்கள் 1924ஆம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராயிருந்த காலத்தில், வைக்கம் நகரில் தலைமையேற்று நடத்திய அச் சத்தியாக்கிரகம் இந்தியாவிலேயே முதன் முதலாக தீண்டாமையை எதிர்த்து நடத்தப்பட்ட சத்தியாக்கிரகமாகும்.

விழா நாளான்று, வடக்கு நுழைவாயிலில் தந்தை பெரியார் அவர்கள் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கிய அதே இடத்திலிருந்து மாபெரும் ஊர்வலமொன்றை ஏற்பாடு செய்து எழிலுற நடத்தியது கேரள அரசு.

செல்வி சீமா செபஸ்டியன் தலைமையில் செயின்ட் மேரீஸ் பள்ளி மாணவிகள் சீருடையோடு வாத்திய இசையுடன் அணிவகுத்துச் சென்றார்கள். தொடர்ந்து அறநிலையத் துறையினர் மங்கள வாத்திய இசை முழக்கிச் சென்றார்கள். அலங்கரிக்கப்பட்ட யானையொன்றும் ஊர்வலத்தில் வந்தது.

மாண்புமிகு தமிழக நிதியமைச்சரும், மாண்புமிகு கேரள வருவாய்த்துறை அமைச்சரும், முன் நடக்க-இருமாநில அரசு அலுவலர்களும், வைக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு எம். கே. கேசவனும், பிற முக்கியப் பிரமுகர்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்ட அற்புதக் காட்சிதனை-ஊர்வலத்தை வீதியின் இருமங்கும் அணி திரண்டு நின்ற ஆண்களும் பெண்களும் கண்டு களித்தனர். விழா விவரம் அறிந்த முதியவர்கள், இந்தப் புதிய ஏற்பாட்டைப் போற்றிப் புகழ்ந்தனர்.

இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் தொடர்ந்த ஊர்வலம், விழா மேடையை நெருங்கியபோது, வாழ்த்து முழக்கங்கள் எழுச்சிமயமாக எழுப்பப்பட்டன.

விழா தொடங்கியது.

வரவேற்புரையாற்றிய கோட்டயம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. ஜே. மாத்யூ, இ.ஆ.ப. அவர்கள்-“வைக்கம் சத்தியாக்கிரகத்தை நினைவுகூரும் வகையில் இங்கே இந்த நினைவகம் அமைக்கும் பணி நில ஒப்படைப்பு மூலம் துவங்கப்படுகிறது'' என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் சார்பில் அதன் செயலாளர் திரு ந. மோகன்தாஸ், அமைச்சர் பெருமக்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

வைக்கத்தின் முன்னாள் நகராட்சித் தலைவர் திரு ஆர். பத்மநாபநாயர் சத்தியாக் கிரகம் பற்றிய அறிக்கையினைப் படித்தார்.

விழாத் தலைமையேற்ற வைக்கம் சட்ட மன்ற உறுப்பினர் திரு எம். கே. கேசவன் (இந். கம்.) அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அனுப்பி யிருந்த வாழ்த்துச் செய்தியினைப் படித்தார். கூடியிருந்த மக்கள் அதைக் கவனத்தோடு கேட்டுப் பாராட்டினர்.

உதவி ஆட்சித் தலைவர் திரு ஜி. ராஜேந்திரன் இ.ஆ.ப., அவர்கள் பேசுகை யில்—''வைக்கம் சத்தியாக்கிரகம் பற்றியோ, அநீதியும் அக்கிரமும் அகல அப்போது பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சி பற்றியோ யாரும் அறியாமல் இருக்க முடியாது'' என்றார்.

இதையடுத்து-தந்தை பெரியார் நினை வகத்திற்கான இடத்திற்காகப் பட்டயம் (பட்டா, வரைபடம்) வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதனை மாண்புமிகு கேரள மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு பி. ஜே. ஜோசப் அவர்கள், மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் அளித்து மகிழ்ந்தார்.

சுமார் 6 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலத்திற்கான அந்தப் பட்டய ஒப்படைப்பின் போது-மேடைக்குச் சற்றுத் தூரத்தில் வேட்டு முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன; வாண வேடிக்கைகள் கண்ணைப் பறித்தன.

அதைத் தொடர்ந்து, மாண்புமிகு கேரள மாநில வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''வைக்கம் போராட்டம் சரித்திரப் பிரசித்தி பெற்றதாகும்; அது தொடர்பாக இன்று நடக்கும் இந்த விழாவும் சரித்திர முக்கியத்துவம் பெறும். மனிதர்கள் ஒருவருக் கொருவர் நட்புடன் இருக்க வேண்டுமே தவிர வர்ண சாதிபேதம் கூடாது. இந்தத் தத்து வத்தை நிலை நிறுத்தவே காந்தியடிகள், பெரியார் போன்றவர்களெல்லாம் பாடுபட் டார்கள். பல துன்பங்களை ஏற்று சமூக நீதியை நிலை நாட்டவும், சீர்திருத்தக் கொள்கைகளை நிலைநிறுத்தவும் - இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாட்டில் திராவிடப் பாரம்பரியத்தைச் சேர்ந்த ஆட்சிகள் மலரச் செய்யவும் அரும்பாடு பட்டு வித்திட்டவர் பெரியார். மிகக்குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டாலும் பெரும் சிறப்போடு நடைபெறும் இவ்விழாவில் பங்கேற்பதில் நான் இதயம் பூரிக்கிறேன்.''

மாண்புமிகு தமிழ்நாடு நிதியமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

''அறிவார்ந்தவர்கள் அதிகமுள்ள கேரள மாநிலத்தில், வைக்கம் நகரில் நடைபெறும் இந்த விழாவில் கலந்து கொள்வதில் பெரிதும் மகிழ்கிறேன். தீண்டாமைக் கொடுமை நீங்க இங்கே சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டபோது,




தந்தை பெரியார் அவர்களும், அவரது துணைவியார் நாகம்மையாரும் தலைமை தாங்கிச் சிறைவாசமேற்றுத் தாங்கொணாக் கொடுமைகளையெல்லாம் சந்தித்து வெற்றி கண்டார்கள். மனிதனை மனிதன் தொடக் கூடாது; முக்கிய வீதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடமாடவே கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடுகள் இருந்த இந்த வைக்கத்தில், அந்தக் கண்மூடிக் கொள்கையெல்லாம் இன்று மண்மூடிப் போயிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் தந்தை பெரியார். அவரை நாம் என்றும் மறக்க முடியாது. தந்தை பெரியார் அவர்களை என்றென்றும் மக்கள் மனதில் நிலைநிறுத்தும் வண்ணம் இங்கே பதினைந்து இலட்சம் ரூபாய் செலவில் அமையவிருக்கும் நினைவகத்திற்காக, முதல் தவணையாக ஐந்து இலட்சம் ரூபாய் அளிக்கப்படுகிறது. இதற்கான நிலத்தை வழங்கியமைக்காகத் தமிழ்நாடு அரசு சார்பிலும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சார் பிலும் கேரள அரசுக்கும், மாண்புமிகு கேரள முதல்வர் அவர்களுக்கும், வைக்கம் வாழ் பெருமக்களுக்கும் நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழா மூலம் தமிழகத்திற்கும், கேரளத்திற்கும் உள்ள தொடர்பு மேலும் வலுப்பெறும்''.

இவ்வாறு உரையாற்றிய மாண்புமிகு தமிழ்நாடு நிதியமைச்சர் அவர்கள், 'தந்தை பெரியார் புரட்சி மொழிகள்' என்ற அரிய நூலின் ஆங்கிலப் பதிப்பை வெளியிட, முதல் படியை மாண்புமிகு கேரள வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பெற்றுக் கொண்டார். வைக்கம் விழா நினைவாகத் தஞ்சாவூர்த் தட்டு ஒன்றும் அவருக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு செய்தி-சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஏ. பி. முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில் ''வைக்கம் போராட்டத்தின் போது தந்தை பெரியார் அவர்களோடு சிறை சென்றவர் திரு கே. பி. கேசவமேனன், செல்வக்குடி யிலே பிறந்த பெரியார் அவர்கள் அந்தப் போராட்டத்தின் போது சிறைவாசமேற்று-சிறையில் கைதிகளுக்குரிய அரையாடையுடன் கைதிகளுக்குரிய கட்டை முத்திரை சுமந்து கொடிய குற்றம் இழைத்த கைதிகளை விட இரு மடங்கு பணிசெய்ததாக அவர் கூறி



யிருக்கிறார். அப்படிப்பட்ட தியாகிக்கு எடுக்கப்படும் விழா இது'' என்றார்.

தமிழ்நாடு அரசு செய்தித்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. அவர்கள் பேசும்போது—''சரித்திர நாயகனாம் தந்தை பெரியாருக்குச் சரித்திரம் படைக்க எடுக்கப்படும் விழா இது. இந்த வைக்கம் நகரத்தை அறுபதாண்டுகளுக்கு முன்னரே உலகிற்கு அறிமுகம் செய்தவர் தந்தை பெரியார். இவ்விழாவில் உணர்ச்சி




யோடு பங்கேற்றுள்ள பெருமக்களையும், அனைத்து அரசியல்கட்சித் தலைவர்களையும், சான்றோர்களையும், அரசு அலுவலர்களையும் பாராட்டுகின்றேன்"என்றார்.

இந்த விழாவில் கோட்டயம் கோட்டாட்சியர் திருமதி லீடா ஜேக்கப், இ.ஆ.ப., முன்னாள் நகராட்சித் தலைவர் திரு ஜான் தாமஸ், நகர காங்கிரஸ் கட்சிச் செயலாளர் திரு பி.வி.விசுவநாதன்,முன்னாள் நகராட்சித் தலைவர் திரு டி. கே. கோபால கிருஷ்ண பணிக்கர், முன்னாள் நகராட்சித் தலைவர் திரு எஸ். நரசிம்மன் நாயக், முன்னாள் நகராட்சித் தலைவர் திரு ஆர். கிருஷ்ணப்பிள்ளை, கேரள புலயர் சபாவைச் சேர்ந்த திரு கே.கே. குட்டப்பன், ஸ்ரீநாராயண தர்ம பரிபாலன யக்ஞத்தைச் சேர்ந்த திரு எஸ். ஹர்ஷன். திரு கே. நாராயண பணிக்கர் (என். எஸ். எஸ்.), ரெவரண்ட் ஜோசப் பள்ளி படல், திரு கே. பி. மூசா (முஸ்லிம் லீக்), வைக்கத்தின் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு விசுவம், (சி.பி.எம்.), திரு ஆர். சுசீலன் (இந். கம்யூ.), திரு கொச்சு ஜோசப் (காங்கிரஸ்), எம். கே. ரவீந்திரன் (இந்திய தேசிய காங்கிரஸ்), திரு கே. கருணாகரன் ஆகியோரும் உரையாற்றினர்.

விழா முடிவில் நகராட்சி ஆணையர் திரு குணசேகரன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

முன்னாள் நகராட்சித் தலைவர் திரு ஆர். பத்மநாப நாயர், தாசில்தார் திரு ராஜப்பன் ஆசாரி, திரு சந்திரசேகரன் நாயர், வைக்கம் ஆணையர் திரு கே. சசீதரன் ஆகியோர் இவ்விழா சிறப்புறப் பெரிதும் பாடுபட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

கட்சிப் பேதமில்லாமல், சாதிமத பேதமில்லாமல் கேரள மக்கள் பல்லாயிரவர் இவ்விழாவில் பங்கேற்றார்கள். இதற்குமுன் இப்படியொரு விழாவைக் கேரள மாநிலம் கண்டதில்லை என்று அரசியல் நோக்கர்கள் போற்றிப் பாராட்டினர்.




# பூக்காரர் பேரணி

**"தே**னை மறந்திருக்கும்
வண்டும் ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்..''

—என்கிற மகாகவி பாரதியாரின் பாடலடிகள் உங்களுக்குத் தெரியும்.

"மொட்டுப் பலவகை யானாலும் அதன்
முருகு தரும்சுவை ஒன்றன்றோ?"

—என்கிற கவிஞர் வாணிதாசனின் வினாப் பொருளும் உங்களுக்குப் புரியும்.

இப்படி... மொட்டு, பூ, வண்டு எல்லாம் பற்றிப் புரிந்து வைத்திருக்கிற நீங்கள்-ஆண்டுதோறும் டெல்லிக்கருகே நடக்கும் 'பூக்காரர் பேரணி' பற்றித் தெரிந்து கொள்ள வேண்டாமோ?

சொல்லுவதற்குப் பாமரத்தனமாகத் தெரிந்தாலும், சரித்திரப் பிரசித்தி பெற்றதாகும் இந்த விழா! ஆம்.... பேரரசன் அக்பரால் இது (கி.பி. 1556-1605) துவக்கி வைக்கப்பட்டது என்றால் சாதாரணமா?

இந்து முஸ்லீம் ஒற்றுமை கருதி முதன்முதலில் முயன்ற பேரரசர் அக்பரே! பகவன்தாஸ், ராஜா தோடர்மால், ராஜாமான் சிங், பீர்பால் முதலான ராஜ புத்திரர்கள் பலர் அக்பர் அவையிலே சிறந்த பதவி பெற்றிருந்தார்கள். இந்துப் பெண்களைத் தான் மணந்து கொண்டது மட்டு மல்ல; தனது மகன் சலீமுக்கும் ராஜபுத்திரப் பெண்ணையே அவர் மணம் செய்வித்தார். இந்துக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பயணவரியை ரத்து செய்தார்.



'எம்மதமும் சம்மதமே' என்ற கருத்தோடு அரசாண்ட அந்தப் பேரரசன் காலத்தில்தான் இந்தப் 'பூக்காரர் பேரணி' துவக்கி வைக்கப்பட்ட தென்கிறார்கள் கற்றறிவாளர்கள்.

டெல்லி மாநகருக்கு அருகிலுள்ள மெஹருளி என்னும் கிராமத்தில் ஆண்டு தவறாது நடைபெறும் இவ்விழா இந்தியிலே 'பூல் வாலோங்கி சாயர்' என்று குறிப்பிடப்படுகிறது. 'பூக்காரர் பேரணி' என நாம் சொல்லும் இந்த அழகிய அணி வகுப்பிலே இந்தியாவின் அத்தனை மாநில மக்களும் அகம் மகிழ்ந்து பங்கேற்பர்.

விழா நாளன்று இந்துக்களும் முஸ்லீம்களும் காளிகோயிலில் இருந்தும், முஸ்லீம் தர்க்காவிலிருந்தும் அணிவகுத்துச் சென்று ஆண்டவனைப் பிரார்த்தித்து நலம் வேண்டுவார்கள். பேரணி ஊர்வலத்திலே அவ்வந் நாட்டு அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய ராட்சச மலர் விசிறிகள் (பங்கா) எழிலோடு எடுத்துச் செல்லப்படும். அந்தந்த நாட்டுப்

பண்பாடு விளக்கும் கலை நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட இடத்திலே மாறி மாறி நடக்கும்.

சாதி மத பேதமின்றி இப்படி தொன்று தொட்டு நடைபெற்ற இவ்விழாப் பேரணி-அக்பருக்குப் பின்னாலே ஔரங்கசீப், சிவாஜி காலத்திலே கொஞ்சம் கொஞ்சமாகப் பலவீனப்பட்டு, ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்த பின் அடியோடு நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

''நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே'' என்றது மெய்யாகி விட்டால், நமக்கில்லை வாழ்வு என்று கருதியே அவ்வாறு அவர்கள் பூக்காரர் பேரணிக்குப் புள்ளிவைத்தார்கள்.

அந்த இரவு முடிந்து 1947-ல் இந்தியாவில் நமக்கெல்லாம் பொழுது விடிந்தது. 1961-ல், பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், இந்து முஸ்லீம் ஒற்றுமை என்றும் ஓங்கக் கருதி 'பூக்காரர் பேரணி'க்குப் புத்துயிரூட்டினார். பழம்பெருமை மாறாமல் அதன் மரபுகள், முறைகள் அப்படியே இன்றும் கடைப்பிடிக்கப் படுகின்றன. நேருவால் உயிர் பெற்றது; அதனாலேயே அவர் பிறந்த நாளையொட்டியே பெரும்பாலும் இந்த அணிவகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

இந்து முஸ்லீம்கள் இணைந்து செல்லும் அப்பேரணியின் முன்னால் வனப்புமிக்க வெல்வெட்டால் யானைக் காதும் தோற்கும்படி பெரிய அளவில் செய்யப்பட்ட 'பங்கா' வண்ணப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டதாக ஏந்திச் செல்லப்படும்; அதைத் தொடர்ந்து அந்த அணியோடு அவ்வம் மாநிலக் கலைக் குழுவினர் கலைநிகழ்ச்சி நடத்திக் களிப்பூட்டியபடி செல்வர்.

1984ஆம் ஆண்டு நடைபெற்ற 'பூக்காரர் பேரணி'யிலே தமிழ் நாட்டிலிருந்து சென்ற 'பங்கா' வுக்குத்தான் முதல் பரிசு.

இந்த ஆண்டு அக்டோபர் 12ஆம் நாளன்று நிகழ்ந்த 'பூக்காரர் பேரணி'யிலோ-'பங்கா' கலைக்குழுவினரின் கண்கவர் நிகழ்ச்சி இரண்டுக்குமே தமிழகத்திற்குத்தான் முதல் பரிசு!

பொய்க்கால் குதிரை, கரகஆட்டம் இதுதான் கலைநிகழ்ச்சி. அதை நாம் பார்த்திருக்கிறோம்.

பரிசுபெற்ற'பங்கா'வினுடைய அமைப்பென்ன தெரியுமா?

அழகு மிளிர்ந்த அதன் மேலே இடது புறம் மதுரைக் கோயில் கோபுரம், வலது புறம் நாகூர் தர்க்கா....கீழே இடது பக்கம் அமிர்தசரசிலுள்ள சீக்கியர் பொற்கோயில், வலது பக்கம் வேளாங்கண்ணி மாதாகோயில்!

எல்லாம் சமஅளவில் எழில் சிந்தின மலர்களால்!

எல்லாவற்றுக்கும் மேலே ஒரு வட்டம்-அதில் ஜரிகையாலே செய்யப்பட்ட வெள்ளைப் புறா ஒன்று சமாதானச் சிறகடித்தது!

இதுதான் 'பூக்காரர் பேரணி' யிலே முதல்பரிசு பெற்ற நமது தமிழ்நாட்டுப்'பங்காவின்' தனிச் சிறப்பு!

இந்து முஸ்லீம் ஒற்றுமைபேணுவதிலே தமிழ்நாடு கொண்டிருக்கும் அக்கறைக்குப் பாராட்டி வாழ்த்தி, நமது அரசுக்குப் பரிசளித்தார், மேதகு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்டராமன்அவர்கள்.

—ராஜா






LINTAS RIN 93 2015 TM





### தமிழ்நாட்டில் வெள்ளச்சேதம்:

# போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள்

**1985-ஆம்** ஆண்டு நவம்பர் திங்கள் தொடக்கத்திலேயே தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடையத் தொடங்கியது.

இதன் காரணமாக சென்னை, செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் 3-வது புயல் எச்சரிக்கைச் சின்னம் விடுக்கப்பட்டது.

இந்தப் பேய் மழை இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்குத் தீபாவளியன்று (12-11-85) உச்சகட்டத்தை அடைந்தது. அன்று மட்டும் சென்னையில் 33 செ.மீ. மழை பெய்தது.

இதன் விளைவாக பாபநாசம், மணிமுத்தாறு, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளும், செம்பரம்பாக்கம், பூண்டி, மதுராந்தகம் ஏரிகளும் நிரம்பி வழிந்தன. செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சை மாவட்டங்களில் பயிர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. செம்பரம்பாக்கம், பூண்டி ஏரிகள் நிரம்பி வழியும் அபாயம் ஏற்பட்டு அந்த ஏரிகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

சென்னை மாநகர் இந்தக் கடும் மழையினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளிலுள்ள மக்கள் மிகுந்த அவதிக்குள்ளானார்கள். அவர்களில் குடிசைவாசிகள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அவர்கள் மாநகராட்சிப் பள்ளிகளிலும், கிண்டி காந்தி மண்டபம், பொறியியல் கல்லூரி போன்ற இடங்களிலும் தங்க வைக்கப்பட்டனர். இவர்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்க, சென்னை மாநகராட்சி தக்க ஏற்பாடுகளைச் செய்தது. வெள்ளப்பகுதிகளிலிருந்து மீட்கப்பட்ட மக்களைக் குடியமர்த்துவதற்கு 220 மையங்கள் சென்னையில் திறக்கப்பட்டன.

பலத்த மழையின் காரணமாகத் தொலை தூரத் தகவல் தொடர்பு பாதிக்கப்பட்டது. சென்னை நகரில் 20 ஆயிரம் தொலைபேசி இணைப்புகள் பழுதடைந்தன. நீண்ட தூரப் பேருந்துகளும் ஓடவில்லை.

எழும்பூரிலிருந்து புறப்படும் எல்லா ரயில்களும் ரத்து செய்யப்பட்டு ரயில் நிலையமும் மூடப்பட்டது. சென்ட்ரலிலும் ரயில்கள் ரத்து செய்யப்பட்டன. பள்ளிகள், கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

நகரில் பல பகுதிகளில் குடிசைகள் மூழ்கின. வீடுகள் இடிந்தன. சாலைகள் பலத்த சேதமுற்றன. அன்றாட வாழ்க்கை ஸ்தம்பித்தது. சென்னையில் கோட்டூர்புரம், நந்தனம் பகுதிகள் வெள்ளக் காடாயின. இப்பகுதி மக்களை மீட்க கடற்படைப் படகுகளும், தனியார் படகுகளும் ஈடுபடுத்தப் பட்டன.

''மீட்புப் பணிகள், உணவு வழங்கல் ஆகியவை தொய்வின்றி நடைபெற வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார். தாழ்வான பகுதிகளில் அல்லது மீட்கப்பட்ட பகுதிகளில் உள்ள எவருக்கும் உணவு கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்படக் கூடாது. ஒரு நாளைக்கு இரு வேளைகளிலும் உணவுப் பொட்டலங்களை வழங்க முதல்வர் அவர்கள் பணித்துள்ளார்'' என்று தலைமைச் செயலர் திரு டி.வி. அந்தோணி, இ.ஆ.ப. அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைமாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்குஆறுதல் கூறினார்கள். தக்க நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் அவர்கள் உத்தரவிட்டார்கள்

14-11-85 அன்று காலை 9.30 மணிக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் கோட்டூர்புரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார். பின்பு கிண்டி காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள வெள்ள நிவாரண முகாமுக்குச் சென்றார். அங்கு தங்கியிருந்த மக்களிடம்'உணவுப் பொட்டலங்கள் சரியாகக் கிடைக்கிறதா?' என்று கேட்டறிந்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார். அவர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகள் உரிய

**முதல் அட்டை சொல்லும் செய்தி:**

நேரத்தில் கிடைக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தர விட்டார்.

பின்பு காலை 11.45 மணிக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை 'ஹெலிகாப்டர்' விமானத்தில் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார்.

அப்போது செய்தியாளர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதாவது:

''வெள்ளத்தால் அதிக அளவு பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. மீட்புப் பணிகளும், நிவாரணப் பணிகளும் மிகவும் துரிதமாக நடந்து வருகின்றன. இந்த மழையால் சாலைகள் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டு உள்ளன.

''நிவாரணப் பணிகளைத் திறமையாகக் கவனித்த தலைமைச் செயலாளர், காவல் துறையினர், ராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் அதிகாரிகளுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

சென்னை நகரின் மற்ற பகுதிகள், செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளை இராணுவ ஹெலிகாப்டரில் சென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏறத்தாழ 3 மணி நேரம் பார்வையிட்டார்.

மதுராந்தகம் ஏரியில் பெரிய உடைப்பு ஏற்பட்டு உள்ளது. இதனால் பல கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. வெள்ளத்தில் சிக்கியவர்களுக்கு 'ஹெலிகாப்டர்' விமானம் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டன.

வெள்ளத்தில் உயிர் இழந்தோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 5,000 உதவித்தொகை வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் (14-11-85) கூறப்பட்டிருப்பதாவது:

''தமிழகம் முழுவதும் குறிப்பாக சென்னை, செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சைமாவட்டங்கள் எப்போதும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு கடும் மழையினாலும், புயலினாலும் பாதிக்கப்பட்டு மிகுந்த உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளதை அனைவரும் உணர்கிறோம். பாதிக்கப்பட்டவர்களுக்காகத் தமிழக அரசு எல்லாவித நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் எடுத்து வருகிறது.

> ஆணைகள் பிறப்பித்துச் செல்வத்தைப் பெருக்கிவிட முடியாது; உண்மை உழைப்பே செல்வத்தைப் படைக்கும்!
>
> —ஜவகர்லால் நேரு

''செஞ்சி அருகே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்து ஒன்று 53 பயணிகளுடன், காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு அதில் பயணம் செய்தவர்கள் அனைவரும் இறந்திருப்பார்களோ என்று எண்ணும் வகையில் இதுவரை 37 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இது ஒரு எதிர்பாராத கோர விபத்தாகும். இத்துயரச் செய்தி எனக்கு மிகுந்த மனவேதனையையும், வருத்தத்தையும் அளிக்கிறது.

''இந்த வெள்ளத்தால் ஏற்பட்ட விபத்தில் உயிர் இழந்தோர் குடும்பத்தார்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிர் இழந்தோரின் குடும்பங்கள் அனைத்திற்கும் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ரூ. 5,000 வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

தமிழகத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் 15-11-85 அன்று பார்வையிட சென்னை வந்தார். பிறகு அவர் சென்னை, மதுராந்தகம் செங்கல்பட்டு, திண்டிவனம், விழுப்புரம், பாண்டிச்சேரி முதலிய இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிகாப்டரிலிருந்து 2 மணி நேரம் பார்வையிட்டார். பிறகு அவர் சென்னை விமான நிலையத்தில் நிவாரணப் பணிகள் குறித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களிடம் ஆலோசனை நடத்தினார். தமிழகத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு உடனடி நிவாரணமாகப் பதினைந்து இலட்சம் ரூபாயும், புதுவைக்கு ஐந்து இலட்சம் ரூபாயும் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டிருப்பதாக மாண்புமிகு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் கூறியுள்ளார்.

தமிழகத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளச் சேத மதிப்பீடு ரூ. 91 கோடி என்று பூர்வாங்கமாகக் கணக்கிடப்பட்டு, மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் தமிழக அரசின் சார்பில் பூர்வாங்கக் குறிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்தார். துயர் துடைப்புப் பணிகளுக்காக உடனடியாக ரூ. 30 கோடி ஒதுக்கீடு செய்யும்படி மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். சேத விவரங்கள் பற்றி தலைப்பு வாரியாகத் தொகுத்து, அவை தொடர்பான புகைப்படங்கள், நிவாரணப் பணிகள் அடங்கிய புகைப்பட ஆல்பம் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்களும் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் கொடுத்தனர்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களோடு மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் சுமார் 30 நிமிடங்கள் ஆலோசனை நடத்தினார். பின்னர் செய்தியாளர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்தனர்.

''வெள்ளச் சேதம் அதிகம் தான். பல இடங்களில் இன்னமும் தண்ணீர் சூழ்ந்துள்ளதையும், குடிசைகள் மூழ்கியிருப்பதையும் ஹெலிகாப்டரில் சென்ற போது காண முடிந்தது. பெருமளவுக்குப் பயிர்ச் சேதமும் ஏற்பட்டுள்ளது.''

என்று மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அதன் பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தலைமைச் செயலர் திரு டி. வி. அந்தோணி, இ. ஆ. ப. கூறியதாவது:

''சென்னை நகரில் விழுந்து விட்ட, சேதம் அடைந்த குடிசைகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இருக்கும் என்று கருதுகிறோம். காலரா தடுப்பு ஊசி தீவிரமாகப் போடப்பட்டு வருகிறது. கடந்த 7 நாட்களில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தடுப்பு ஊசி போடப்பட்டது. இப்போது தினமும் 20 ஆயிரம் பேருக்கு ஊசி போடப்படுகிறது.

''மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின் பேரில் முழுவதுமாகச் சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ. 300ம், ஓரளவு சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ. 150ம் நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 கிலோ அரிசி, ஒரு வேட்டி சேலையும் வழங்கப்படும். இன்று முதல் ஒரு வாரக் காலத்துக்கு இந்த உதவிகள் வழங்கப்படும்''.

—பி.வி ஜி

# நேருவைப் பற்றி...





* ஜவகர்லால் நேருவினுடைய தீரம், ஞானம், ஆளுமை ஆகியவை நம்நாட்டை ஒன்றுபடுத்தி வைத்திருந்தன. ஒற்றுமை நீடிக்க வேண்டுமானால் இந்தப் பண்புகள் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

—டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்

* ஜவகர்லால் நேரு, இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பெருமக்களில் ஒருவராகத் திகழ்ந்தார். தலைவர் என்ற வகையில் அவர் சாதித்த சாதனைகள் - ஒரு பிரதமரின் சாதனைகளை விடப் பெருமை வாய்ந்தவை.

—திருமதி இந்திரா காந்தி

நேருஜி பெரிய சிந்தனையாளர். புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற உணர்ச்சியை மக்களிடத்தில் பரப்பினார். அவருடைய துடிப்பும், எண்ணமும், இலட்சிய நோக்கும், ஆர்வத்தோடு செயல்படும் தன்மையும் நாம் இன்னும் நினைத்துப் பார்த்தால் உணர்ச்சி ஏற்படுத்தக்கூடியவை.

—பெருந்தலைவர் கே. காமராஜ்

* உலகப் பெருந்தலைவர் வரிசையில் சிறப்புமிக்க இடம்பெற்று இந்தியத் துணைக் கண்டத்திற்குத் தனிப் புகழிடம் தேடிக் கொடுத்துப் பூசல்கள் பிளவுகளால் நாடு கேடடையாமல் பாதுகாத்துப் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படாமல் தடுத்து வந்த மாபெரும் காவலர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள்.

—பேரறிஞர் அண்ணா

* இந்தியத் துணைக் கண்டத்தை ஒன்றாக இணைத்து அதன் வாழ்வுக்காகவும், வளர்ச்சிக்காகவும் ஓயாது உழைத்துக் கொண்டிருந்த மகத்தான சக்தியே நேரு.

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம். ஜி. ஆர்.



சிந்தினார்கள். தேசிய நீரோட்டம் வலுப்பெற கங்கை முதல் காவிரி வரை நீர் வளங்களை இணைக்க வேண்டும்'' என்றார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு ஏ. கே. ஏ. அப்துல்சமது அவர்கள் பேசுகையில், 'திருமதி இந்திராகாந்தி அவர்களுக்குக் கிடைத்த அனுபவம் போன்று வேறு எவருக்கும் கிடைத்திருக்காது. அவர் ஓர் சிறந்த நிர்வாகி. சமுதாயத்திற்கு அவர் ஆற்றிய பணி மகத்தானது' என்றார்.

சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் பேசுகையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் உடல் நலம் குன்றியபோது பார்க்க வந்திருந்த திருமதி இந்திராகாந்தி அவர்கள்

# திருமதி இந்திரா: முதலாம் ஆண்டு நினைவு நாள்

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் முதலாண்டு நினைவு அஞ்சலி சென்னைக் கலைவாணர் அரங்கில் **31-10-85** அன்று தமிழக அரசு சார்பில் கொண்டாடப்பட்டது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழாத் தொடங்கியது. செய்திமக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன் இ. ஆ. ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.









திரு. அ. சக்திதாசன் அவர்கள் பேசுகையில், நலிந்த மக்களுக்குச் சலுகைகள் செய்துள்ளார். இருபது அம்சத் திட்டத்தினால் கிராம மக்கள் பயன் பெற்றனர். தீண்டாமை ஒழிப்புக்குச் சட்டவடிவம் கொடுத்துள்ளார்' என்றார்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் அவர்கள் பேசுகையில், 'தேசிய ஒருமைப்பாட்டைக் காத்தார்கள். மன்னர் மானியத்தை ஒழித்தார்கள். நேதாஜி படத்திற்குத் தேசிய அந்தஸ்து வழங்கினார்கள் என்றார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு குமரி அனந்தன் அவர்கள் பேசுகையில், '' தேசத்திற்கான ரத்தம் சிந்துவேன் என்று ஒரிசாவில் நடந்த கூட்டத்தில் மறைந்த பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் பேசினார்கள். அடுத்தநாளே ரத்தம் மைய அரசு எல்லா உதவிகளைச் செய்யும் என்றார். ஏழைய எளிய மக்களுக்குப் பயன்படும் வகையில் உருவாக்கப்பட்ட புதிய இருபது அம்சத் திட்டத்தை திருமதி இந்திராகாந்தி அவர்களின் நினைவு நாளில் நல்ல முறையில் நிறைவேற்றுவோம்' என்றார்.

மாநிலங்களவை உறுப்பினர் திரு எம். கல்யாணசுந்தரம் அவர்கள் பேசுகையில், 'நம்முடைய நாட்டில் இரண்டு படுகொலைகள் நடந்துள்ளன. படுகொலைக்கு ஆளானவர்கள் காந்தியும், இந்திராவும் ஆகும். உலக அமைதிக்காக வாழ்ந்தவர் திருமதி இந்திராகாந்தியாகும். சுரண்டலை ஒழிக்கவும் ஆயுதக் குறைப்பை ஏற்படுத்தவும் பாடுபட்டார்' என்றார்.

மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில், ''தாய் போன்ற அன்புடன் நடந்து முதல்வருக்குத் தேவையான சிகிச்சைக்கு ஏற்பாடுகளைச் செய்தார். அவரின் தியாகத்தை மறக்க முடியாது. மிகச்சிறந்த தலைவியாக இருந்து நமக்குச்சிறந்த தத்துவங்களை வழிகாட்டிச் சென்றுள்ளார். அவர் சிந்திய ரத்தம் இந்திய ஒருமைப்பாட்டைக் குலைக்க முடியாது'' என்றார்.









திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் பேசுகையில், 'திருமதி இந்திரா அவர்கள் மக்களால் நேசிக்கப்பட்ட தலைவியாகத் திகழ்ந்தார். மதச் சார்பற்ற தன்மைக்காகத் தன் உயிரை நீத்தவர். அவர் கனவு நனவாக நாம் இன்று சபதம் ஏற்போம்' என்றார்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில், 'இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களில் சில ஒரே நேரத்தில் கை கொடுத்தும் கைகொடுக்காமலும் இருந்தது உண்டு. திருமதி இந்திரா காந்தி அவர்கட்குக் கைகொடுத்து தோளோடு தோள் நின்று துணை புரிந்தது தமிழ்நாடு ஒன்றுதான் என்றால் மிகையாகாது.

'சென்னை மருத்துவமனையில் கடந்த ஆண்டு முதல்வர் உடல் நலம் குன்றியிருந்த போது அவரை நேரடியாகப் பார்க்க வந்த திருமதி இந்திராகாந்தி அவர்கள் அமைச்சர்களை அழைத்துப் பேசி எல்லாவிதமான உதவிகளைச் செய்யத் தயார் என்றார். முதல்வர் வாழ்க்கையில் பலவற்றை எதிர்நோக்கியவர். எனவே வெற்றி பெறுவார்' என்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில்,' இந்தியாவின் பெருமையை உலகத்துக்கு எடுத்துக் காட்டியவர் திருமதி இந்திராகாந்தி என்றால் மிகையாகாது. நாட்டின் ஒற்றுமையைக் கட்டிக் காப்பதே திருமதி இந்திராகாந்திக்கு நாம் செய்யும் அஞ்சலி ஆகும்' என்றார்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில், 'பாரதத்தின் பெண் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவு குறித்து நாடுமுழுவதும் உலக முழுவதும் நினைவு நாள் கொண்டாடப்படுகிறது. வீராங்கனைகளை இலக்கியங்களில்தான் நாம் கண்டோம். ஆனால் நம் காலத்தில் இந்திரா என்ற வீராங்கனையை நேரில் கண்டோம்.

'ஒரே நாடு என்றும், ஒற்றுமையைக் கட்டிக் காப்போம் என்றும், இந்த நாளில் உறுதிமொழி எடுப்போம்' என்றார்.

மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு எஸ். எல்.







குரானா அவர்கள் தலைமை உரையாற்றுகையில் கூறியதாவது:

'திருமதி இந்திராகாந்தி நாட்டின் சிறந்த தலைவராக, உலகப் புகழ் கொண்ட பிரமுகராக, சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழைகளின் காவலராக விளங்கினார். அவர் உலக அரங்கில் இந்தியா சிறந்த நாடாக விளங்கப் பாடுபட்டார். பொருளாதார மேம்பாடு அடையவும், வறுமையை அகற்றவும் பாடுபட்டார். நாட்டின் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் நிலை நாட்டப் பாடுபட்டார்' என்றார்.

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய அனைவரும் அவரின் தியாகத்தைப் பாராட்டியும், நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

- சாதிமுறைகள் நம்மிடையே நீடித்திருக்கும் வரை நமக்கு விடிவுகாலமே இல்லை; நமது குறிக்கோளை நாம் ஒரு நாளும் அடைய முடியாது.
- அதிகமாக யாருக்கும் அறிவுரை கூறவேண்டாம்; உங்கள் கடமையை நீங்கள் செய்யுங்கள். அது ஒன்றுதான் நீங்கள் பிறருக்கு அளிக்கக்கூடிய அறிவுரை. நீங்கள் செய்யுங்கள்; பிறர் அதைப் பின்பற்றுவார்கள்.

—ஜவகர்லால் நேரு



# டில்லியில் இந்திராகாந்தி நினைவு நாள்

**வே**லியே பயிரை மேய்ந்த கதையாக சென்ற ஆண்டு அக்டோபர் 31ஆம் நாள், காவலாளிகளாலேயே சுட்டுக்கொல்லப்பட்ட திருமதி இந்திராகாந்தியின் முதலாவது நினைவு நாள், 31.10.85 அன்று டில்லியில் நடத்தப்பட்டது.

'சக்தி நிலையம்' (சக்தி ஸ்தல்) எனப்படும் திருமதி இந்திராகாந்தி எரியூட்டப்பட்ட சமாதிக்குச் சென்று, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மலர்தூவி-மலர்வளையம் வைத்துக் கண்ணீரஞ்சலி செலுத்தினார். அவரது துணைவியார் திருமதி ஜானகி அம்மையாரும், திரு மோகனரங்கம் எம்.பி.தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு ஜி.ஆர்.எட்மண்ட், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடன் சென்றிருந்தனர்.

இல்லத்தில், திருமதி இந்திராகாந்திசுடப்பட்ட இடத்தருகே ஒரு சிறு மேடையில் திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி பிரார்த்தனை கீதங்களை உளமுருக இசைத்தவாறிருந்தார். 14 மொழிகளில் இப்பாடல்கள் பாடப்பட்டன. காஞ்சிப் பெரியவர், திருமதி இந்திரா காந்தி பற்றி இயற்றிய பாடலொன்றும் பாடப்பட்டது.

அதிகாலை 4 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்ட நினைவு ஊர்வலம், சமாதியை 6 மணியளவில் வந்தடைந்தது. பிரதமர் ராஜீவ்காந்தியும், மாண்புமிகு தமிழக முதல்வரும் மற்றவர்களும் அந்த மௌன ஊர்வலத்தில் நடந்து வந்தார்கள்.

சக்திநிலையத்தின் மேடைமேல் பிரதமர் ராஜீவ் கங்கை நீரைத் தெளித்து, சுற்றிவந்து, ரோஜா மலர்களைத் தூவி வணங்கினார். அவரது மனைவி திருமதி சோனியா, மகள் பிரியங்கா, மகன் ராகுல் ஆகியோரும் அவ்வாறே செய்தனர்.

இந்தியக் குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர் ஆகியோர் மலர் வளையங்கள் வைத்தார்கள். இதைத்தொடர்ந்துதான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் மற்றும் மத்திய-மாநில அமைச்சர் பெருமக்களும் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

திருமதி இந்திராகாந்தி சுடப்பட்ட எண் 1. சப்தர்ஜங் இல்லத்திற்கு மறுபடி காலை 8.25 மணிக்குச் சென்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கே நடைபெற்ற இரங்கல் கூட்டத்திலும் பங்கேற்றார்.

கடுங்குளிர் காரணமாக, நடுப்பகல் ஒரு மணியளவில் டெல்லி 'போட் கிளப்' திடலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது திருமதி இந்திரா காந்திக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம். இந்தியப் பிரதமர், துணைக் குடியரசுத் தலைவர் ஆகியோர் முக்கியப் பங்குவகித்த இக் கூட்டத்தில், சிறப்பு அழைப்பின் பேரில் சென்று கலந்துகொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சரியாக 1.30 மணிக்குத் தனது இரங்கலுரையை நிகழ்த்தினார்.

அங்கே திரண்டிருந்த லட்சோப லட்சம் மக்களின் உள்ளம் உருக்கிய அந்த உரை விவரமே இவ்விதழின் 3ஆம் பக்கத்தில் இடம் பெற்றிருப்பது!



திருமதி இந்திரா காந்தி நினைவு நாளன்று (31.10.85) புதுடெல்லியில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருமதி இந்திரா காந்தி சமாதியில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். அதைத் தொடர்ந்து நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் உரையாற்றினார்.








புதுடெல்லியில் 30.10.85ல் நடைபெற்ற நதிநீர்ப் பங்கீட்டு மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடன்...



மாண்புமிகு பஞ்சாப் முதல்வர் திரு சர்ஜித்சிங் பர்னாலா.




மாண்புமிகு புதுவை முதல்வர் திரு பரூக் மரைக்காயர்.



மாண்புமிகு கேரள மாநில முதல்வர் திரு கே. கருணாகரன்.




15.11.85 அன்று வெள்ளப் பகுதிகளைக் காணச் சென்னை வந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு விமான நிலையத்தில் வரவேற்பு.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர். அவர்களை, மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு என். டி. ராமாராவ் அவர்கள் சென்னையில் சந்தித்தார்.

கேரள மாநிலத்தில் உள்ள
க்கம் நகரில் (3.11.85)
டபெற்ற தந்தை பெரியார்
னைவக அடிக்கல் நாட்டு
ாவில்...

மாண்புமிகு தமிழக
நிதியமைச்சர் டாக்டர்
ாவலர் இரா. நெடுஞ்
செழியன், மாண்புமிகு
கேரள வருவாய்த்துறை
அமைச்சர் திரு. பி. ஜே.
ஜோசப் ஆகியோர்
ஊர்வலத்தில்...



மாண்புமிகு தமிழக நிதி
அமைச்சரிடம், மாண்புமிகு
கேரள வருவாய்த்துறை
அமைச்சர் நில ஒப்படைப்
ப் பத்திரம் வழங்கல்.



மாண்புமிகு கேரள
வருவாய்த்துறை
அமைச்சருக்கு, மாண்புமிகு
தமிழக நிதியமைச்சர்
நினைவுப் பரிசு அளித்தல்.






# கோவை மாவட்டத்தில் பால் வளம்

கோவை மாவட்டத்தில் 312 கூட்டுறவுச் சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களுக்காக அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் பால் வாங்குவோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் ஆதிதிராவிடர்களுக்கான 3 சங்கங்களும் அடங்கும். இக்கூட்டுறவுச் சங்கங்களில் 49,243 உறுப்பினர்கள் சேர்ந்து பயன் பெறுகின்றனர்.

கோவை மாவட்டத்தில் இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்திற்காக, 1982-ஆம் ஆண்டு முதல் 1988-ஆம் ஆண்டு வரை ரூ. 4½ கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் புதிதாகப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்குவதற்கும், பால் கொள்முதல் செய்வதற்கும் கோவை மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தைச் சார்ந்த மூன்று குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. ஈரோட்டிலிருந்து பிரிக்கப்பட்டு துணைப்பதிவாளர் (பால்பதம்) அலுவலகம் தனியாகச் செயல்படத் துவங்கிய தேதியிலிருந்து இதுவரை 128 புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கோவை மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்ட பெரும்பாலான சங்கங்களில் உள்ள 25,000 உறுப்பினர்கள் வரை நடமாடும் கால்நடை மருத்தக உதவி பெற்று பயனடைந்து வருகின்றனர். கோவை மாவட்டத்தில் 24 பால் சேகரிக்கும் வழித்தடங்கள் மூலம் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. கோவை, திருப்பூர், சுல்தான்பேட்டை மற்றும் சண்முகாபுரம் ஆகிய 4 இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைந்துள்ளன. 1983-84-ஆம் ஆண்டில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு ஆதிதிராவிடர் நலத்திட்டம் மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டுவசதி நிறுவனம் மூலம் கறவை மாடுகள் வாங்குவதற்கு மானியமாக தலா ரூ. 1250 ஒதுக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதனால் பயனடைந்தவர்கள் 114 பேர்.

1984-85-ஆம் ஆண்டில் இதே பணிக்காக 252 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு மானியமாகத் தலா ரூ. 1250 ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டது. நடப்பு நிதி ஆண்டில் சுமார் 300 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க மானியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1984-85-ஆம் ஆண்டில் 3 ஆதிதிராவிடர் உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பால் கேன்கள் வாங்க 50% மான்யமாக ரூ. 2439.60 வழங்கப்பட்டுள்ளது.

1983-84-ஆம் ஆண்டில் 7 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 30 அங்கத்தினர்களுக்குப் புல் வளர்ப்பு மானியமாக ரூ. 2455 பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டிற்குப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குப் புல் வளர்ப்பு மானியம் வழங்க ரூ. 2000 அனுமதி கோரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி நிறுவனத் திட்டத்தின் கீழ் கோவை மாவட்டத்தில் தென்னமநல்லூர் என்ற கிராமத்தில் ஆதிதிராவிடர் மகளிர்க்கென 1983 நவம்பர் திங்களில் ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் துவங்கப்பட்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. 1983-84-ஆம் ஆண்டில் இச்சங்கத்தைச் சார்ந்த 50 ஆதிதிராவிட மகளிர்க்குக் கறவை மாடுகள் வாங்க தலா ரூ. 1250 மானியமாக வழங்கப்பட்டது. 1984-85-ஆம் ஆண்டிலும் 50 ஆதிதிராவிட மகளிர் உறுப்பினர்களுக்குத் தலா ரூ. 1250 கறவை மாடுகள் வாங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் பால் பெருக்கத் திட்டத்தின் கீழ் 3½ கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பாலைக் கையாளும் திறன் கொண்ட பால் பண்ணை கோவையை அடுத்து பேரூர் அருகிலுள்ள பச்சாபாளையம் பிரிவு அருகே மிக விரைவில் செயல்படவுள்ளது.

கிராமிய பால்பண்ணை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கோவில்பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஆய்வகத்துடன் கூடிய கிடங்கு கட்டுவதற்கு 1982-83-ஆம் ஆண்டில் ரூ. 30,000 கடன் வழங்கப்பட்டது. இச்சங்கம் தற்போது சொந்தக் கட்டடத்தில் சிறந்த முறையில் செயல்பட்டுவருகிறது.

நடப்பு ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 60,000 ஒதுக்கப்பட்டுள்ளது. திருப்பூர் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பால் சேகரம் செய்து விற்பனை செய்ய வேன் வாங்குவதற்காக ஏற்கெனவே ரூ. 20,000 அனுமதிக்கப்பட்டுள்ளது. மீதித் தொகையும் விரைவில் பயன்படுத்தப்படவுள்ளது.

# மீனவர் நல்வாழ்வு



தமிழ்நாட்டின் 1000 கிலோ மீட்டர் நீண்ட கடலோரப் பகுதியில் 4 இலட்சம் கடல் மீனவர்களும், விரிந்து பரந்த நிலப் பகுதியில் 1.2 இலட்சம் உள்நாட்டு மீனவர்களும் வசித்து வருகிறார்கள். கடல் மீனவர்களில் 1 இலட்சம் மீனவர்களும், உள்நாட்டு மீனவர்களில் 60,000 மீனவர்களும் தீவிர மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கூட்டுறவுக் கொள்கைகளை, எல்லா வகையிலுமான பொருளாதார வாழ்க்கையிலும் செயற்படுத்தலாம் என்பதைச் சொல்லத் தேவையில்லை. மாநிலத்திலுள்ள மீனவ சமுதாயத்தின் பொருளாதார நிலையை மேம்பாடடையச் செய்வது, மீன்துறையின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாகும். இதனால், விவசாயிகளுக்கென அமைக்கப்பட்ட கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் போன்று, மீனவர்கள் நலனுக்காகக் கடலோர மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களென வரையறுக்கப்பட்ட சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

நடப்பு ஆண்டுக் கணக்கின்படி 271 கடலோர மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், 220 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், 10 மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சம்மேளனங்கள், 19 கூட்டுறவு மீன்விற்பனை ஒன்றியம்-சங்கங்கள், 4 கூட்டுறவு இரால் வளர்ப்புப் பண்ணைகள், 2 அரைமில்லியன் நபர் வேலை வாய்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 27 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மீனவ சமுதாயத்திற்கான மேம்பாட்டுத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு மீன் துறை தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது.

அரசின் குறுகிய கால, மத்திய கால, நீண்ட கால, கிட்டங்கிகள் கடன், இடைத்தரகர்களை நீக்கும் பொறுப்பின் கடன் உதவி மற்றும் நடைமுறை மூலதனக் கடன் வசதிகளுடன் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக மீன்பிடிப் படகுகள், தளவாடங்கள் வாங்க மற்றும் மீன்பிடிப்பு சார்ந்த பணிகளுக்குக் கடன் மற்றும் மானியமாகப் பண உதவிகள் செய்யப்படுகின்றன.



நலிந்த பிரிவினரின் நல்வாழ்வில் நாட்டம்கொண்ட தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், அது வழங்கும் நிதியுதவியில் ஒரு பங்கு மானியமாகவும், ஒரு பங்கு கடனாகவும் அளிக்கிறது. கடன் குறைந்த வட்டியில் (11½%) நீண்ட காலத்தில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் பின் வரும் பணிகளுக்காக வழங்கப்படுகிறது:

1. கட்டுமரங்கள், தோணிகள், நாட்டுப் படகுகள், வள்ளங்கள் மற்றும் விசைப்படகுகள் வாங்க-80% கடன், 20% மானியம்.
(தவணைக்காலம் 10-14 ஆண்டுகள்)

2. பலவகையான மீன்களைப் பிடிக்க பலவகைப்பட்ட தரமான வலைகளை வாங்க-80% கடன் 20% மானியம்.
(தவணைக்காலம் 6 ஆண்டுகள்)

3. மீனை விரைவாக விற்பனைத் தளத்திற்குக் கொண்டு செல்ல வாகனங்கள் வாங்க 50% கடன். 50% மானியம். (தவணைக் காலம் 10 ஆண்டுகள்)

4. மீன் கெட்டுப் போகாமல் பாதுகாக்கத் தேவைப்படும் பனிக் கட்டிகள் உற்பத்தி செய்ய, பனிக் கட்டி உற்பத்தி நிலையங்கள் மற்றும் குளிர்பதன அறைகள் அமைக்க - 80% கடன் 20% மானியம் (தவணைக்காலம் 14 ஆண்டுகள்)

5. மீனவர்களின் வலை மற்றும் மீன்பிடிச் சாதனங்களைப் பாதுகாப்பாக வைக்க கிட்டங்கிகள் கட்ட, சுகாதாரமான சூழ்நிலையில் மீன்விற்பனை அங்காடிகள் கட்ட 50% கடன் 50% மானியம். (தவணைக்காலம் 12 ஆண்டுகள்-முதல் இரண்டு ஆண்டுகளில் வட்டி மட்டும்)

6. படகு கட்டும் தளங்கள் அமைக்க 80% கடன் 20% மானியம் (தவணைக்காலம் 14 ஆண்டுகள்)

7. படகுகள் மற்றும் அவற்றின் இயந்திரங்களைப் பழுது பார்க்க பட்டறைகள் அமைக்க 80% கடன் 20% மானியம் (தவணைக் காலம் 14 ஆண்டுகள்)

8. உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்கும் வகையில், மீன்வளர்ப்புக் குளங்களைப் புதுப்பிக்க, மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் அமைக்க 100% கடன் (தவணைக்காலம் 14 ஆண்டுகள்)

9. மீன் விற்பனைக்கும் இதர பணிகளுக்கும் தேவைப்படும் நிதியுதவி பெறுவதற்குச் சங்கத்தின் கடன் பெறும் சக்தியை உயர்த்துவதற்காகப் பங்குத் தொகைக் கடன் 100% கடன்) (தவணைக்காலம் 14 ஆண்டுகள்

1984-85ஆம் ஆண்டு முடிய 77 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலமாக ரூ. 341.284 இலட்சம் வழங்கப்பட்டிருக்

கிறது. மீனவர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட மண்டல மீன்துறை உதவி இயக்குநர்களை அணுகி இத்திட்டத்தின் மூலம் பண உதவி பெறக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மீனவர்கள், மீன்பிடி படகு, வலை, மீன் ஏற்றிச் செல்ல வாகனம் வாங்கத் தேவைப்படும் செலவினத்தில் ஒரு பகுதியைத் தமிழ்நாடு அரசு மானியமாக வழங்குகிறது. எஞ்சிய செலவினத்தை வங்கிகள் மூலம் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் கடனாகப் பெற வேண்டும்.

### மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எழுத்தர் மானியம்:

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை நடத்திச் செல்லும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பெரும்பாலும் கல்வி அறிவு குறைந்தவர்களாக இருப்பதால், இவர்கள் சங்கம் கணக்குகளைச் சரிவரப் பராமரிக்க இயலாது என்பதால் சங்கங்களுக்கு எழுத்தர்கள் நியமனம் செய்வது அவசியமென்பதை உணர்ந்து, தமிழ்நாடு அரசு 1983-84ஆம் ஆண்டு முதன் முதலில் 200 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைத் தேர்ந்தெடுத்து நிதி உதவி வழங்குகிறது. நான்கு ஆண்டுகளுக்கு எழுத்தர் மானியம் முறையே முதல் ஆண்டு ரூ. 3,000, இரண்டாம் ஆண்டு ரூ. 2,250, மூன்றாம் ஆண்டு ரூ. 1,500, நான்காம் ஆண்டு ரூ. 750 என வழங்குகிறது.

### பங்குத் தொகைக் கடன்

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வாங்கும் அளவை அதிகரிக்க 1984-85ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு பங்குத் தொகைக் கடனாக ஒரு சங்கத்திற்கு ரூ. 25,000 வரை வழங்கி வருகிறது. 1984-85ஆம் ஆண்டில் 28 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 4.75 இலட்சம் வழங்கப்பட்டது. இதனால் சங்கங்கள் தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் இதர நிறுவனங்களிலிருந்து அதிகக் கடன் பெற்று உறுப்பினர்களுக்கு நியாய விலையில் அத்தியாவசியப் பொருள்கள் வாங்கி வழங்கவும் முடிகிறது.

### மீனவர் விபத்து காப்புறுதித் திட்டம்

மீனவர்கள் விபத்து காரணமாக முழுமையாக உடல் ஊனமுற்றாலோ, இறந்துவிட்டாலோ ரூ. 15,000 வழங்கவும், உடல் ஊனமுற்றால் ரூ. 7,500 வழங்கவும் விபத்துக்காப்புறுதித் திட்டம் செயலாற்றப்படுகிறது. இதற்குப் பிரிமியமாக, ஆண்டொன்றுக்கு மீனவர் செலுத்த வேண்டிய ரூ. 12ல் மைய அரசு ரூ. 6ம், மாநில அரசு ரூ. 6ம் செலுத்துகின்றன. இதுவரை 1,16,264 மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர். மீன்பிடிப்பின்போது இறந்த-ஊனமுற்ற 77 மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு இதுவரை ரூ.10.95 இலட்சம் நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது.

அனைத்து மீனவர்களும் அவர்கள் அங்கத்தினர்களாக உள்ள மீனவர் கூட்டுறவுச்சங்கம் மூலம் இந்தத் திட்டத்தில் சேர்த்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடலில் மீன்பிடித் தொழில் செய்வோர் மீன் பிடிக் காலமல்லாத மூன்று மாதங்களுக்கு வருவாயின்றிவாடும்நிலைபோக்க மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் ஒன்பது மாதங்களுக்கு ரூ. 90 செலுத்தினால், தமிழ்நாடு அரசு ரூ. 90 சேர்த்து பருவகாலமற்ற மூன்று மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 60 வீதம் கொடுக்கிறது. இதுவரை 25,878 மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற்றுள்ளனர்.

மீனவர் கூட்டுறவுகள் மூலம் செயலாற்றப்படும் இந்தத் திட்டத்தில் மீனவர்கள் சேர்ந்து முழுமையாகப் பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### குடியிருப்பு வசதி

மீனவர்களின் குடியிருப்பு வசதியை மேம்பாடடையச் செய்ய, மீனவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டி இனாமாக வழங்கப்படுகிறது. ஒப்புதல் அளிக்கப்பட்ட 11,404 குடியிருப்புகளில் இதுவரையிலும் 9623 வீடுகள் கட்டி வழங்கப்பட்டிருக்கின்றன. தவிரவும் இணைப்புச் சாலைவசதிகள், விளக்குகள், குடிதண்ணீர் வசதிகள், சுகாதார வசதிகள், மனமகிழ் மன்றங்கள் மீனவர் குடியிருப்புகளில் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

### மீனவ மகளிர் கூட்டுறவுகள்

மீனவ மகளிரின் சமூகப் பொருளாதார வாழ்க்கையை மேம்பாடடையச் செய்யவும், மீனவ மகளிரிடையே சமூக அமைப்புகளை அமைக்கப் பயிற்சி அளிக்கவும், மீனவ மகளிர் தனது திறமையை வெளிக்கொணரவும், சுயபாதுகாப்பு மற்றும் சேமிப்புப் பழக்கத்தைப் போதிக்கவும், 1981-ஆம் ஆண்டு முதல் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுகின்றன. இச் சங்கங்கள் மூலமாக மீன் விற்பனை மற்றும் மீன் சார்ந்த தொழில்களைச் செய்ய கடன் வசதி, நியாயவிலைக்கடைகள் அமைத்தல், மீனவ சிறு குழந்தைகளுக்காக பால்வாடிகள் அமைத்து அங்கு மீனவ மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளித்தல், தையல் இயந்திரம் வழங்குதல், தையல் தொழிலில் பயிற்சி அளித்தல், வேலையில்லாப் படித்த மீனவப் பெண்களுக்கு வலை பின்னும் தொழிலை உருவாக்கிக் கொடுத்தல், மற்றும் சேமிப்புப் பழக்கங்களை உருவாக்குதல் ஆகிய பணிகள் செய்து தரப்படுகின்றன.



# படமும் — செய்தியும்

மாண்புமிகு குஜராத் மாநிலத் தகவல் தொடர்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் திரு தௌலத் பாய் பார்மர் அவர்கள் சென்னையில் 6-11-85 அன்று அண்ணா சமாதி சென்று மலர் வளையம் வைத்தார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் உடன் உள்ளார்.





புதுடெல்லி விஞ்ஞான் பவனில் 1.11.85 அன்று இவ்வாண்டிற்கான உற்பத்தித் திறன் விருது வழங்கும் விழாவில் தமிழகத்திலுள்ள பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரு விருதும், இதர போக்குவரத்துக் கழகங்களுக்காக ஒரு விருதும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களால் வழங்கப்பட்டன. இவ்விருதினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் 4.11.85 அன்று வழங்கினார்.




சென்னை மாநகராட்சியின் சார்பில், நவீன மறு கலவை இயந்திரத்தால் சாலை அமைக்கும் பணித் துவக்க விழா 6.11.85 அன்று காமராஜர் சாலையில் நடந்தது. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் சாலை அமைக்கும் பணியைத் தொடங்கி வைத்தார். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்து சாமி அவர்கள் விழாவில் பங்கேற்றார்.



கிண்டி ராஜ்பவனில் 7.11.85 அன்று நடந்த கொடிநாள் அமைப்புக் குழுக் கூட்டத்தில் மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் கலந்து கொண்டனர்.

# தேசிய ஒருமைப்பாட்டு வாரம்

ஆண்டுதோறும் நவம்பர்த் திங்களில் தேசிய ஒருமைப்பாட்டு வாரம் கொண்டாடப் படுகிறது. இந்த வாரத்தில் தேசியக் கொடியை ஏற்றுதல், பொதுக் கூட்டங்கள், தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி எடுத்தல், ஒருமைப் பாட்டுக் கருத்துக்களை உணர்த்தும் திரைப் படங்கள் காட்டுதல் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

இவ்வார விழாவினை மாநில ஆளுநர்கள், முதல்வர்கள் துவக்கி வைப்பார்கள். தேசிய ஒருமைப்பாட்டினை மேம்படுத்தும் நிகழ்ச்சிகளை கல்வி நிலையங்கள், சமூகத் தொண்டு நிறு வனங்கள் ஏற்பாடு செய்யும்.

அன்றைய தினம் தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழியை அனைவரும் எடுத்துக் கொள்வர். அது வருமாறு :

"நாட்டின் சுதந்தரத்தையும், ஒருமைப் பாட்டையும் காத்து வலுப்படுத்த முழு மனதான ஈடுபாட்டுடன் பாடுபடுவேன். ஒருபோதும் வன் முறையில் ஈடுபட மாட்டேன். சமயம், மொழி, வட்டார அரசியல், பொருளாதாரக் குறைபாடு களைப் பொறுத்த வேறுபாடுகளுக்கும், பூசல் களுக்கும் அமைதியான முறையில் சட்டநெறி சார்ந்த வழிகளில் தீர்வு காணப்பட வேண்டும்".

# நூல் நயம்

## அண்ணாவின் சமுதாயப் புரட்சி

தொகுத்தவர்: அன்புப்பழம்நீ,

வெளியீடு : அபிராமி பப்ளி கேஷன்ஸ், 307 லிங்கிச்செட்டி தெரு, சென்னை-600 001

விலை: ரூ.7 பக்கம்: 88

பேரறிஞர் அண்ணாவின் பேச்சு, பாமர மக்களை விழிப் படையச் செய்தது மட்டுமல்ல, உறங்கிக் கிடந்தவர்களை தட்டி எழுப்பியது மட்டுமல்ல, சமுதா யப் புரட்சிக்கே வித்திட்டது.

பேரறிஞர் அண்ணாவின் பேச் சிலே வேகமும் இருந்தது; விவேக மும் இருந்தது; மேடைப்பேச் சிலே தென்றலும் வீசியது, புய லும் வீசியது. அத்தகைய அழ கான சொல்லோவியங்களை இந் நூலிலே நாம் பார்க்கிறோம்; படித்துச் சுவைக்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பல்வேறு கூட்டங்களில் பேசிய சொற்பொழிவுகளின் தொகுப் பாக விளங்குகிறது இந்நூல்.

சூழ்நிலை, அண்ணாவின் மே விழா முழக்கம், சமுதாயப்புரட்சி, ஜனநாயகம், கல்வியும் அரசாங்க மும் என்னும் தலைப்புகளில் ஐந்து சொற்பொழிவுக் கட்டுரை கள் இடம் பெற்றுள்ளன. ஒவ் வொன்றும் தேனாய் இனிக்கின் றன. சூழ்நிலை என்னும் முதல் கட்டுரையில் முத்தமிழை முக் கனிகளான மா, பலா, வாழைக்கு ஒப்பிடுவது அருமையிலும் அருமை. அதே போல, மே விழா முழக்கமும் நம் சிந்தைக்கு விருந்தூட்டுகின்றது.

இளைஞர்கள் மட்டுமல்ல, முதி யவர்களும் படித்துப்பயன்பெறத் தக்க சுவையான தொகுப்பு இந் நூல்.

## காந்தியாருடன் பெரியார் ஈ வெ ரா. எஸ். இராமநாதன், குத்தூசி குருசாமி, எஸ். நீலாவதி அம்மை சந்திப்பு

தொகுப்பு: கழஞ்சூர் செல்வராஜி

வெளியீடு: குத்தூசி குருசாமி பதிப்பகம், வேலூர்-9 வ. ஆ. மாவட்டம்

விலை: ரூ. 5 பக்கம்: 64.

நீண்ட தலைப்புடைய இந்நூல் நெஞ்சில் நிலைக்கத் தக்க நிகழ்ச்சி களைப் பதிய வைக்கிறது.

அண்ணல் காந்தியடிகளா ருடன் தந்தை பெரியார், திரு எஸ். இராமநாதன், திரு குத்தூசி குருசாமி, திருமதி எஸ். நீலாவதி அம்மை, கே. எம். பாலசுப்பிர மணியம், . ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலனார், குஞ்சிதம் குருசாமி, அவர் தங்கைமார்கள் காந்தம்மாள் சுந்தரவடிவேலு, சகுந்தலா ஆகியோர் சந்தித்த வரலாறுகளை அழகுபட, தெளிவு படத் தொகுத்துள்ளார் திரு கழஞ்சூர் செல்வராஜி. கேள்வி-பதில் வடிவில் அமைந்துள்ள இந் நூலில் பல அரிய செய்திகளைத் தெரிந்து கொள்கிறோம்.

## அறிவியல் பெருமணிகள்

ஆசிரியர்: மலையமான்

வெளியீடு; ஒளிப்பதிப்பகம் 63, ரங்காச்சாரி சாலை சென்னை-600 018

விலை: ரூ. 9 பக்கம்: 111

அறிவியல் பெருமணிகள் பதி னைந்து பேர்களுடைய வாழ்க் கைக் குறிப்புகளைக் கொண்டது இந்நூல்.

மேலை நாட்டு விஞ்ஞானிக ளான பிதாகரஸ், ஆர்க்கிமிடிஸ், லியனார்டோ, கோப்பர்னிகஸ், கலிலியோ, நியூட்டன், டால்டன், காஸ், ஸ்டீபென்சன், பாரடே, டார்வின், பிரெயில், பாஸ்டியூர், ஹான்சன், எடிசன் ஆகியோரைப் பற்றிய சுவையான நிகழ்ச்சிகள், அவர்களது கண்டுபிடிப்புகள், தொண்டுகள் எல்லாம் நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் தன்னம்பிக்கை பெறவும், அறிவு வளர்ச்சி பெற வும், அதன் மூலம் வாழ்க்கையில் முன்னேறவும் இந்நூல் பெரிதும் துணை செய்யும். ஆசிரியர், எளிய நடையில் எல்லாரும் படித்துத் தெரிந்துகொள்கிற வகையில் இதனை எழுதியுள்ளார்.

பி வி. கிரி.



# எல்காட்டில் வேலை வாய்ப்பு...

**தொ**லைக்காட்சிச் சாதன தயாரிப்புக்கான பாகங்கள் இணைப்பு, சோதனை போன்றவைகளில் ஆண்டுதோறும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 500 பேருக்குப் பயிற்சி அளிக்கத் தமிழ்நாடு மின்அணுவியல் கழகம் (எல்காட்) தீர்மானித்துள்ளது.

இவ்வாறு பயிற்சி பெற்றவர்களின் பணி கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்குப் பயன்பட பயிற்சி பெற்றவர்களுக்கு, பயிற்சி முடிந்த பின் இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள தொழில் கருவிகள் வழங்கப்படவும் திட்டமுள்ளது. தொலைக்காட்சி ''ரிப்பேர்'' மற்றும் ''சர்வீசிங்'' போன்ற பணிகளில் இவர்கள் ஈடுபட இந்த உதவி.

வயர்லஸ் மூலமான தகவல் தொடர்புச் சாதன அமைப்பு, டிஜிடல் கைக்கடிகாரத் தயாரிப்பு நிலையம், தொலைக்காட்சி தயாரிப்பு நிலையமான 'சியர்ஸ் எல்காட் லிமிடெட்' அமைப்பு முதலிய பல்வேறு இடங்களுக்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் சென்றார்.

கூட்டுமுயற்சியுடன் தொலைக்காட்சிச் சாதனப் பெட்டிகள் தயாரிக்கும் சியர்ஸ் எல்காட் 200 பேருக்கு வேலைவாய்ப்பு தந்துள்ளது. கருப்புவெள்ளை, வண்ணத் தொலைக்காட்சிகளைத் தயாரிக்கும் இந்த கூட்டுமுயற்சி அமைப்பு 110 இலட்ச ரூபாய் மூலதனத்தில் ஆனதாகும். இங்குத் தயாராகும் கருப்பு வெள்ளைப் பெட்டி இரண்டு ரகத்தில் ரூபாய் 2,915, 3,625 விலையிலும், வண்ண டி.வி 7,650, 7,950 விலைகளிலும் கிடைக்கும்.

விரைவில் ''ரிமோட் கண்ட்ரோலுடன் (அமர்ந்திருக்கும் இடத்திலிருந்து தொலைக்காட்சியை இயங்கச் செய்வது, திருத்துவது, சரிசெய்வது போன்றவைகளைச் செய்யலாம்'). கிடைக்கும்.

மிகவும் நுணுக்கமாக ஒவ்வொரு கட்டத்திலும் சிறந்த சோதனைக்குப் பின் இங்குக் கடிகாரங்கள் தயாராகிறது. சுமார் 300 ரூபாய் அளவில் மிகச் சிறந்த கடிகாரம், தேதி, மாதம், வினாடி, நிமிடம், அலாரம் போன்ற அத்தனை அம்சங்களும் கொண்ட கடிகாரங்கள் இங்கு உற்பத்தியாகிறது. ஆண்டிற்கு 50 ஆயிரம் டிஜிடல் கடியாரங்கள் தயாரிக்கும் திறன் கொண்டுள்ளது இந்த அமைப்பு. ரூ. 140க்குக் கைக்கடிகாரம் விற்பனைக்கு உள்ளது.

வயர்லஸ் தகவல் சாதன அமைப்பு இங்கிலாந்து நாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன் (ஜி. இ.சி. மார்கோனி கம்பெனி) செயல்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள சாதனங்கள் இங்குத் தயாராகிறது. நூறு பேருக்கு இங்கு வேலைவாய்ப்பு உள்ளது.

மற்றும் மின் அணுவியல் சோதனைக் கூடங்களும், கம்ப்யூட்டர் சர்வீஸ் அமைப்பும் இங்கு உள்ளன.

வயர்லஸ் போன்ற கருவிகள் போக்குவரத்துக்கழகங்களுக்கும், கனிம நிறுவனங்களுக்கும், காவல் துறைக்கும் செய்து கொடுக்கப்படுவதுடன், மைய அரசின் பல்வேறு நிறுவனங்களுக்கும் செய்து கொடுக்கப்படுகிறது. —அ. மருது.



## விளையும் பயிர் :

படிப்போடு நின்று விடாமல், கதை, கட்டுரை, கவிதை எழுதுவதிலும், நாடகம், பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றும் பாராட்டுதல்கள் பெற்ற இம்மாணவர்களை நாமும் பாராட்டுவோம்!



வெ. சு. சரவணன்,
இளம் வேதியியல்—இறுதியாண்டு
அரசு கலைக் கல்லூரி,
கரூர்-5.

'வளரும் எழுத்தாளர்கள் வாழ்க!



ச. பாலச் சந்திர பிரபாகரன்,
தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி,
தஞ்சாவூர்.

## மாணவர் பக்கம்



# சோவியத் நாட்டில் தமிழ் நூல் வெளியீடு

தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடு முதலியவை பற்றிய புதிய நூல் ஒன்று மாஸ்கோவில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பெயர்: "பிறப்பு முதல் இறப்பு வரை—தமிழர் பற்றிய குறிப்புக்கள்". இதனை எழுதியவர், சோவியத் தமிழறிஞரான விதாலி ஃபூர்ணிகா.

தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, கலாசாரம் முதலியவை குறித்து சோவியத் யூனியனில் சித்தாந்த ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் பெருமளவில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. திராவிட தேசிய இனங்களின் கடந்த கால வரலாற்றுக்கும், நிகழ்கால வரலாற்றுக்கும் இடையே உள்ள இடைவெளியை இட்டு நிரப்ப, சோவியத் ஆராய்ச்சியாளர்கள் முயல்கின்றனர். தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள், மதம், நம்பிக்கைகள் முதலியவை பற்றி இந்த நூலில் விதாலி ஃபூர்ணிகா விளக்கி, இந்த ஆராய்ச்சிக்குப் பங்காற்றியிருக்கிறார்.

நூலாசிரியர் தென் இந்தியாவுக்கு வருகை புரிந்த பொழுது சேகரித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இந்த நூலை எழுதியிருக்கிறார்.

தமிழர் பெயர்களின் ஆரம்பம், அதிருஷ்ட எண்கள், துரதிருஷ்ட எண்கள், திருமணச் சடங்குகள், ஈமக்கிரியைகள், பஞ்சாங்கம், பண்டிகைகள் முதலியவை பற்றி ஒரு தனி அத்தியாயமே இவர் எழுதியிருக்கிறார்.

## சுய தொழில்கள்

இரண்டுகைகள் இருக்கையிலே
என்னதயக்கம்?—வேலை
இல்லை! இல்லை! என்றுவீணாய்
ஏனோ மயக்கம்?

திரண்டதோள்கள் உலகைக்கூடத்
தூக்கிநிறுத்தும்!—என்ற
தெம்புகொண்டால் இளைஞர்களே!
ஏது வருத்தம்?

சுயதொழில்கள் செய்யப் பல
உதவிகளுண்டு—நாம்
சோர்ந்திடாமல் காப்பதற்கு
உறுதுணையுண்டு!

முயல்வதெனில் தொழில் விவரம்
தருவதுமுண்டு!—உடன்
மூலதனம் மிக எளிதாய்க்
கிடைப்பதுமுண்டு!

படித்தவர்கள் வேலையின்றிச்
சோர்ந்திருப்பதோ?—நாம்
பட்டம் பெற்றும் பயன்களில்லை
என்று நோவதோ?

துடித்தெழுந்து உழைத்துழைத்துத்
தொழில்கள் செய்குவோம்!—நாட்டைச்
சுய தொழில்கள் வளர்ச்சி மூலம்
உயர்த்தி வாழுவோம்!

—நெல்லை ஆ. கணபதி



## இன்று குழந்தைகள் நீங்கள்!

**— ஜவகர்லால் நேரு**

இந்த நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும், நல்ல முறையில் வளர்த்து வரப்படுகிறார்களா என்று கவனித்துக் கொள்வதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு என்று நான் கருதுகிறேன். ஏனெனில், குழந்தைகள் இந்தநாட்டின் செல்வம். இந்தச் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளுகிறோம் என்பதைப் பொறுத்துத்தான், இந்தியாவின் எதிர்காலம் அமைந்திருக்கிறது.

உலக முழுவதிலும் உள்ள குழந்தைகளின் நினைவு எனக்கு வருகிறது. அவர்களிடம் பல விதங்களில் வெளிப்படையான மாறுதலைக் கண்டேன். பேசும் மொழிகள் எத்தனை! உடுத்தியிருந்த உடைகள்தான் எத்தனை விதம்! ஆனால் அவர்கள் அழகு முகங்களிலே காணப்பட்ட உணர்ச்சி, அதனால் தோன்றும் கவர்ச்சி, உலக முழுவதிலும் ஒன்றாகவே இருப்பதைக் கண்டேன். அவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தால், அவர்கள் விளையாடவோ, சண்டை போடவோ செய்வார்கள்.

''அவர்கள் சண்டை போட்டுக் கொள்வதும் ஒரு விளையாட்டுத்தான். தங்களுக்குள்ளே இன, நிற, சாதி, மத வேற்றுமைகளை அவர்கள் பார்ப்பதில்லை. அவர்களுடைய தாய் தந்தையரை விடப் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். துரதிருஷ்டவசமாகப் பெரியவர்களாக ஆகும்போது அவர்களுடைய இயற்கை அறிவை, பெரியவர்களின் போதனைகளும், நடத்தையும் மறைத்துவிடுகின்றன.

உலகத்தின்பல விஷயங்களைக் குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியந்தான். ஆனால் அவர்கள் தாங்களாகவே அவற்றைப் புரிந்து கொள்ள, நாம் வசதி வாய்ப்புக்கள் செய்து தர வேண்டும். நாமாக நமது மனப்போக்கின்படி உலக விஷயங்கள் பற்றிய ஞானத்தை அவர்கள் மூளையிலே திணிக்க முயற்சியெடுக்கக்கூடாது.

குழந்தைகள் செம்மையாக வளருவதற்கு வகை செய்வதுதான் நமது நாட்டின் ஒவ்வொரு அரசியல் கட்சிகளிள் இலட்சியமாகத் திகழவேண்டும். சொல்லப்போனால் இதுதான் முழு முதல் கொள்கையாக இருக்கவேண்டும்.

ஆம், வயது வளர வளரத்தான் அவர்களுடைய உள்ளம் கறைப்படுகிறது என்று சொல்வதைவிட, கறைப்படுத்தப்படுகிறது என்றுதான் கூறவேண்டும்.

குழந்தைகளின் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு அறிவு போதித்து அறிவாளிகளாக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். என்னைக் கேட்டால் அவர்கள் குழந்தைகளை அதனதன் போக்கில் வளரவிட்டால் குழந்தைகள் தாங்களாகவே புத்திசாலிகளாக அறிவாளிகளாக-விளங்குவார்கள்.

* ஜவகர்லால் நேரு படிகக் கல்லைப் போலத் தூய்மையானவர் ஐயப்பட முடியாத அளவு உண்மையானவர்; அச்சமும் பழிப்பும் அற்ற வீரர் அவர். நாடு அவர் கைகளில் நலமுடன் இருக்கும்.

**—காந்தியடிகள்**

## பொது அறிவுச் செய்திகள்

உலகில் சுமார் 10,000 கோடி பறவைகள் உள்ளன.

மிகவும் சிறிய இதயம் உள்ள மிருகம் சிங்கம்.

டீ குடிப்பதை அறிமுகப்படுத்திய நாடு சீனா.

12.9 1955ல்தான் பென்சிலின் முதன் முதல் விறபனைக்கு வந்தது.

தமிழகத்திலிருந்து வெளிவந்த முதல் பத்திரிகை 'சென்னை கூரியர்'.

இசைக் கருவியான வயலினுக்கு முதன் முதல் வடிவம் கொடுத்தவர் 'ஸ்ட்ராடிவேரியஸ்' எனும் இத்தாலியர்.

1852ல் இலண்டனிலுள்ள ஜார்ஜ் யார்ட் எனும் பகுதியில்தான் முதன் முதல் காபிக் கடை திறக்கப்பட்டது.

கரையான்களில் 2,000 வகைகள் உள்ளன.

கடற்குதிரைகளில் 50 வகைகள் உள்ளன.

1917க்கு முன்பு 'கேலிகோ நகரம்' என்று மாஸ்கோ அழைக்கப்பட்டது.

த. சீ. பாலு, எம்.ஏ.,
(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை)

# தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை



புதுடெல்லியில், தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் நவம்பர் 8, 9 தேதிகளில் மாண்புமிகு பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். மற்றும் மாநில முதல்வர்கள் அனைவரும் இக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களோடு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு சுற்றுலா, அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் மற்றும் அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி, நிதித்துறைச் செயலாளர் திரு சி. இராமச்சந்திரன், திட்டத்துறைச் செயலாளர் திரு எஸ். நாராயணன் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தின் இரண்டாம் நாளன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரியதோர் உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

தேசிய வளர்ச்சிக் குழுவின் இக்கூட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். புதிதாகப் பிரதமர் பொறுப்பை ஏற்ற பிறகு பிரதமர் ராஜீவ்காந்தி முதல் முறையாக இக்கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்.

தேசிய மட்டத்தில் ஏற்பட்ட பல நெருக்கடி மிக்க சிக்கல்களைத் தீர்ப்பதில் பிரதமர் ராஜீவ் காந்தி எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் மிகவும் போற்றத் தக்கதாகும்.

அறிவியல, தொழில் நுணுக்கம, மின் அணுக் கருவிகள், தொழில்கள் மற்றும் கல்வி முறைகளில் அவர் கொண்டுள்ள முற்போக்கான கருத்துக்கள் ஏழாவது ஐந்தாண்டு திட்ட நகலில முழுமையாக பிரதிபலிககின்றன.

## முற்போக்குத் திட்டங்கள்

வேலை இல்லாத் திண்டாட்டம், வறுமைஒழிப்பு வளர்ச்சித் திட்டங்கள் குடும்ப நலத்திட்டம், குடும்பநல வளர்ச்சிமற்றும் மாநிலங்களிடையே சமசீரான நிலையை ஏற்படுத்தல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை தந்து அடிப்படை முன்னேற்றங்களுக்கான முனைப்புகள் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் சிறப்பாக இடம் பெற்றிருப்பதை தமிழக அரசு முழுமன துடன் ஏற்கிறது.

ஏற்கனவே முதலீடு செய்யப்பட்டவைகளில் உற்பத்திச் சக்தியை அதிகரிக்கவும்-திறனை மேம்படுத்தச் செய்யவும் பரந்த அளவிலான முனைப்புகளை மேற்கொள்ள வழிசெய்யபட்டிருப்பதையும் நாங்கள் முழு மனதுடன் வரவேற்கிறோம்.

அடுத்த 15 ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் தொலைநோக்கோடு ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் இந்த நோக்கங்கள் நிறைவேற வலுவான வழிமுறைகள்

உருவாக்கப்பட வேண்டும் என்றும் நான் இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

இருபது அம்சத்திட்டத்தை நிறைவேற்றுவதிலும் குடும்பநலத்திட்டங்களை நிறைவேற்றுவதிலும் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் தமிழகம் முன்னணியில் இருந்துவருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இலங்கைத் தமிழர் பிரச்னை

இலங்கையில் இருந்து ஏராளமான அகதிகள் தமிழகம் வந்துள்ளனர். சுமார் ஒரு லட்சத்துக்கும் மேல் இலங்கை அகதிகள் தமிழ் நாட்டில் உள்ளனர். அவர்களுள் 2,267 பேர் ஆதரவற்றவர்கள். இலங்கை அகதிகள் பிரச்னை தமிழக அரசை மிகவும் கவலை அடையச்செய்துள்ளது.

இப்பிரச்னைக்கு நீண்ட கால தொலை நோக்குன் கூடிய ஒரு தீர்வினை விரைந்து காணவேண்டும். அப்போது தான் தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் தாயகம் திரும்ப முடியும்.

அதற்கேற்ற வகையில் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு கௌரவமான ஒரு நல்ல அரசியல் தீர்வினை எட்டுவதற்கு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் மேலும் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்துக்கு 5,750 கோடி ரூபாய் ஒதுககப்பட்டுள்ளது. இது போதாது.

மேலும் 12,850 கோடி ரூபாய் ஒதுக்கினால்தான் தமிழகத்தின் அனைத்து திட்டங்களையும் முழுமையாக நிறைவேற்ற முடியும் என்பதனை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்,

இந்தியாவுக்கு வெளிநாட்டு உதவி பெறும் போது அதே அளவு-அதே அடிப்படையில் மாநிலங்களுக்கும் வெளிநாட்டு உதவி கிடைக்கச் செய்ய வேண்டும்.

மத்திய அரசு எழும்பும் கடன்களில் பாதித்தொகையை மாநிலங்களுக்குபகிர்ந்தளிக்கவேண்டும் என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

மத்திய மின்உற்பத்திச் சக்தியை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கும்போது அம்மாநிலங்களின் தேவையைக் கருத்தில்கொண்டு விநியோகிக்க வேண்டும் என்பதனையும் இங்கு குறிப்பிட விருமபுகிறேன்.

மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் மாநிலங்கள் இருக்கின்றன. எனவே தங்களின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் திட்டங்களை உருவாக்கவும் முன்னேற்றங்களை அடையவும மாநிலங்களும் விரும்புகின்றன.

குறிப்பாகத் தமிழ் நாட்டில் சத்துணவுத் திட்டம் தன்னிறைவுத் திட்டம் ஆகியவை புதிய உத்வேகத் திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தமிழகம் மேலும் நிதி ஆதாரங்களை தேட வேண்டியதிருக்கிறது.

ஆனால மத்திய அரசால் அமல்படுத்தும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான நிதி உதவிகள் அளிக்கும் வகையிலேயே கடந்த காலத்தில் நிலைமைகள் இருப்பதால், மாநிலங்களின் நலன் கருதி தமிழகம் போன்ற மாநிலங்கள் தனியாக அமல்படுத்தும் சத்துணவு போன்ற நலவாழ்வுத் திட்டங்களுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டு விடுகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசின் புதிய முயற்சிகளை வரவேற்கும் அதே நேரத்தில் மாநிலங்களை முன்கூட்டியே கலந்து ஆலோசிக்காமலும் திட்டங்கள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்காமலும் பல திட்டங்கள் மத்திய அரசு மட்டத்தில் உருவாக்கப்படுகின்றன என்பதையும் இங்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இத்தகைய நிலைமை காரணமாக மாநிலங்களின் நிதிநிலை சீர்கேடு அடைவதுடன் மத்திய அரசு அமல்படுத்த விரும்பும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநிலங்களுக்குத் தாமதம் ஏற்படுகிறது.

மத்திய அரசின் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யும் போது மாநில அரசுகளின் திட்டங்களையும் கருத்தில் கொண்டு நிதி ஒதுக்கீடுகளை மறுபரிசீலனை செய்யுமாறு இக்குழுவை வலியுறுத்த விரும்புகிறேன்.

அபபொழுது தான் 7-வது ஐந்தாண்டுத்திட்டத்தின் குறிக்கோள்களை அதன் உண்மையான பலன்களுடன் நாடு தழுவிய முறையில் அமல்படுத்த வழி ஏற்படும்.

## சேதுசமுத்திரத் திட்டம்

தமிழ்நாட்டில் சேது சமுத்திரத் திட்டம், சென்னை உரத்தொழிற்சாலை விரிவாக்கம், உதகமண்டலம இந்துஸ்தான் பிலிம் தொழிற்சாலை விரிவாககம சென்னை நகரப் பாதாள ரயில் திட்டம், ஆகியவை துரிதமாக நிறைவேற்றப் படும்வகையில் போதுமான நிதிஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

தமிழ் நாட்டில்தான் மீட்டர் கேஜ் ரயில்பாதைகள் அதிகம் உள்ளன. அவற்றை அகல ரயில் பாதைகளாக மாற்றுவதற்கான திட்டம் முழு அளவில் மேற்கொள்ளப்படவில்லை என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

6563 கிலோ மீட்டர் நீள முள்ள மீட்டர் கேஜ் ரயில் பாதையில் 3925 கிலோ மீட்டர் பாதை மட்டுமே அகலரயில்பாதையாக மாற்ற திட்டமிடப் பட்டிருக்கிறது.

பெருகி வரும் பயணிகள் மற்றும் சரக்குப்போக்கு



வரத்தினைக் கருத்தில் கொண்டு அனைத்து மீட்டர்கேஜ் பாதைகளை அகல ரயில் பாதையாக மாற்றவேண்டும் என்பதனையும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

கரூர்— திண்டுக்கல் அகல ரயில் பாதைத் திட்டவேலைகளை விரைவுபடுத்தப்படுவதுடன் தூத்துக்குடி வரையிலும் அது விரிவாக்கப்படும் பணியும் துரிதமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தவிரும்புகிறேன்.

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் அணுமின் நிலையம் அமைப்பதற்கான நிதிஒதுக்கிடு விரைவான முடிவெடுக்க வேண்டும் என்பதுடன் கல்பாக்கம் அணுமின் நிலையம் மேலும் விரிவாக்கப்படவும் போதிய நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## காவிரி நீர்ப் பிரச்னை-

தஞ்சை மாவட்டத்தின் விவசாய உற்பத்தியைச் சீர்குலைக்கும் வகையில் காவிரி நீர்ப்பிரச்னை நீடிக்கிறது. நாட்டின் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையும் குறிக்கோளை நிறைவேற்ற உடனடியாக காவிரி நதி நீர் பிரச்னையில் பிரதமர் தலையிட்டு தீர்த்து வைக்க முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கேரளத்தில் வீணாகக் கடலில் கலக்கும் நதிநீரை தமிழ்நாட்டுககுத் திருப்பிடவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்த விரும்புகிறேன்

## சீரான விநியோக முறை

தமிழ்நாட்டில் பொது விநியோக முறையை சிறப்பாக அமல்படுத்தி வருகிறோம். வறட்சி மற்றும் பாசன நீர் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் போதுமான அளவு உணவு உற்பத்தி இல்லாததால் பொதுவிநியோகமுறையை சீராக அமல்படுத்த மத்திய அரசு போதிய அளவு அரிசியை மத்தியத் தொகுப்பில் இருந்து தமிழ் நாட்டுக்கு ஒதுக்க வேண்டும என்றும வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

## நேரு சொன்னவை



* உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமானால், அந்த நம்பிக்கையை வைத்தே மலைகளைக் கூட அசைத்துவிடலாம்!

* விதவைகள் மறுமணம் செய்துகொள்வதை நான் ஆதரிக்கிறேன். ஆனால், அது விஷயத்தை அவரவர் விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டும்.

* இன்று செய்யப்படவேண்டிய பணிகள் எத்தனையோ இருக்க, இறந்துபோன காலத்தைச் சொல்லிப் புகழ்பாடிக் கொண்டிருந்தால் நம் சக்திதான் வீணாகும்!

* நமது நாட்டு மக்கள் பலர் அயல் நாடுகளுக்குப் பயணம் போகிறார்கள். அப்படிப் பதினாயிரக் கணக்கான மைல்கள் பயணம் போவோர், ஆயிரம் இரண்டாயிரம் மைல்கள் மட்டுமே பயணம் சென்று இந்தியா பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவதில்லை; இது சரியல்ல.

* இந்தியா மாறுதல் அடைய அடைய, எல்லா வகையான சக்திகளும் கிராமங்களைக் கவர்ந்து பற்றும் அந்தச் சூழ்நிலை மிகவும் வரவேற்கத்தக்க மாறுதல் ஆகும்!

* பாதுகாப்பு என்பது போர்முனையிலே இராணுவ வீரர்கள் செய்யும் வேலை மட்டுமல்ல; நம் உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்குவதும் பர்துகாப்பு வேலைதான்!

## துணைவியைப் பாராட்டிய சிதம்பரனார்!

திருவள்ளுவர், தம் மனைவி இறந்த போது 'அடிசிற் கினியாளே! அன்புடையாளே'! என்று மனைவியின் பெருமையைச் செய்யுள் வடிவில் எடுத்துரைத்ததாகச் செவி வழிச் செய்தி ஒன்று நெடுங்காலமாக நிலவி வருகின்றது. வள்ளுவரைப் போலவே வ.உ. சிதம்பரனாரும் மனைவியின் மாண்பை உணர்ந்தவர். தமது முதல் மனைவி வள்ளியம்மை மறைந்தபோது, துன்பமுற்று, வருந்தி, அவரது பெருமையைப் பாட்டாக வடித்துள்ளார். அப்பாடல் வருமாறு:

'இல்லமதில் ஒன்றுமே இல்லையென்னாள்; எக்காலும்
நல்லுணவு தான்சமைத்து நல்குவாள்—அல்லலற
இன்புறவே செய்திடுவாள்; எப்பணியும் உள்ளமுடன்
அன்புமிக நல்லாள் அமைந்து!'

'என்னுடைய நண்பர்களும் ஏழையரும் மற்றவரும்
என்னுடைய வீடுவந்தால் ஏந்திழைதான்-தன்னுடைய
பெற்றோர்வந் தார்களெனப் பேணி உபசரிப்பாள்
கற்றோரும் உள்ளுவக்கக் கண்டு!'



# ஐ.நா.வுக்கு 40 வயது!

ஐக்கிய நாடுகள் சபையின் 40வது ஆண்டு விழாக் கூட்டத்தில் (24.10.85) பேச உலகநாடுகளின் ஏழு தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களில் ஒருவராக விளங்கி வியத்தகு புகழபெற்றார், நமது இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ்காந்தி அவர்கள்.

ஆம்; அமெரிக்க அதிபர், சீனப் பிரதமர் இருவரையும் அடுத்து, மூன்றாவது பேச்சாளராகத் திகழ்ந்தார் அவர். அவரையடுத்து-பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சர், நியூஜிலாந்து பிரதமர் டேவிட் லாங்கே, சோவியத்;பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அயல்நாட்டு அமைச்சர்கள் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

ஏறத்தாழ அனைத்துச் சுதந்திர நாடுகளும் உறுப்பினராக உள்ளதுதான் ஐக்கிய நாடுகள் சபை. உலக அமைதியையும், உலக நாடுகளின் பாதுகாப்பையும் கண்காணிக்கும் உலகின் ஒரே ஸ்தாபனமான இதன் ஆண்டு விழாவில் பேசியபோது ''ஐ.நா.சபை ஏற்பட்டு நாற்பது ஆண்டுகள் கழிந்த பின்பும் உலக அநீதிகள், பேதங்கள், அபாயங்கள் இன்னும் இருக்கத்தான் வேண்டுமா?'' என்றார் நாற்பத்தோரே வயது நிரம்பிய நமது இளம் பிரதமர் திரு. ராஜீவ்.

அவரது பேச்சு, அங்கிருந்த உலகத் தலைவர்களின் உள்ளத்தையெல்லாம் தொடுவதாக அமைந்திருந்தது.

ஐ. நா. அமைக்கப்பட்டது இரண்டாவது உலகப் போரின் போதுதான். ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள், 1945 ஏப்ரலில் சான்பிரான்ஸிஸ்கோவில் சந்தித்து. இப் புதிய அமைப்பிற்கான விதிமுறைகளை வகுத்தார்கள். 1945 ஜூன் 26ஆம் நாள் கையெழுத்தாகிய அந்த விதி முறைகளே 'ஐ. நா. சாசனம்' என்று கூறப்படுகிறது.

இதற்கான பல்வேறு அரசுகளின் — நாடாளுமன்றங்களின் அங்கீகாரம் கிடைக்கச் சில மாதங்களாயின. எல்லா அனுமதிகளோடும் இந்தச் சாசனம் 1945 அக்டோபர் 24ஆம் நாளன்றுதான் அமலுக்கு வந்தது. அந்த நாளே ஐக்கிய நாடுகள் சபை உதயமான நாளாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

மகாசபை, பந்தோபஸ்து சபை, டிரஸ்டி சபை, பொருளாதார சமூகநலச் சபை, சர்வதேச நீதிமன்றம், 'செயலகம், ஆகிய ஆறு முக்கிய அமைப்புகளுடைய ஐ.நா.சபையின் நோக்கங்கள் உன்னதமானவை.

* சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் பராமரித்தல்...

* நாடுகளிடையே நட்புறவை வளர்த்தல்...

* சர்வதேசப் பொருளாதார, சமூக, கலாச்சார-மற்றும் மனிதாபிமானப் பிரச்சனைகளைத் தீர்ப்பதிலும்,மனித உரிமைகளையும் ஆதார உரிமைகளையும் மதிக்கச் செய்வதிலும் சர்வதேச முறையில் ஒத்துழைத்தல்...

ஆகிய இந்த மூன்று முக்கியப் பொது நோக்கங்களை எட்டுவதில், அனைத்து நாடுகளின் செயல்களைச் சீர்படுத்தும் ஒரு நிலையமாக விளங்கும் ஐ.நா. சபையின் 40 ஆம் ஆண்டு விழாப் பேச்சு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் புகழை இமயம் அளவுக்கு உயர்த்துவதாக அமைந்தது.

''சமாதானத்திற்கான எந்த வாய்ப்பையும் தவறவிடக்கூடாது, அமைதி காப்பதில் அனைவரும் அக்கறையோடு பாடுபடவேண்டும். ஆயுதக் குறைப்புத் திட்டங்களை மிகக் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும்'' என்றெல்லாம் தமது உரையிலே குறிப்பிட்ட அவர், ''அமெரிக்க அதிபர் ரீகனும்,சோவியத் அதிபர் கோர்பசேவும் சந்தித்துப் பேச இருப்பது நல்ல பலன் தரக்கூடும்'' என்று தான்நம்புவதாகவும் தெரிவித்தார்.

''அணிசேரா நாட்டினரான நாங்கள் சமாதானத்திலே நம்பிக்கை கொண்டவர்கள். உலகில் சமாதானமும் அணுகுண்டும் ஒன்றாக இருக்க முடியாது; சுதந்திரமும் இனவெறியும் ஒருமித்து இருக்க முடியாது. உலகின் பல பகுதிகளில் பட்டினி தாண்டவமாடுகிறது. பட்டினி அதன் மூலமான சாவு இவைகளிலிருந்து மக்களைக் காக்க நாம் ஒன்று பட்டுப்பணியாற்ற வேண்டும்''.

—இவ்வாறெல்லாம் உலகின் பல்வேறு பிரச்சனைகள் குறித்து பேசிய இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் மேடைக்குப் பேசவந்தபோதும், தன் ஆணித்தரமான அழகிய உரையை முடித்தபோதும் ஐ.நா.சபையிலே எழுந்த கரவொலி அடங்க நெடுநேரமாயிற்று.

—'இந்திரன்'







## உலகத் தலைவர்களோடு நேரு

















## இந்தியத் தலைவர்களோடு


குழந்தைகளுடன்
நேரு





# காமராஜர் மாவட்டம் வளம் பெறுகிறது

காமராஜர் மாவட்டத்தில் 1985-86 ஆம் ஆண்டிற்கு 13,127 பேருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 4 கோடி வழங்கப்படுகிறது. இதில் ரூ. 132 இலட்சம் அரசு மானியமாக வழங்குகிறது. இதுவரை 2,518 பேருக்கு ரூ.154.28 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 771 பணிகள் ரூ.128 இலட்சத்தில் செயல்படவுள்ளது. சத்துணவுக் கூடம் கட்டுதல், ஆதிதிராவிடர் வீடுகள் கட்டுதல், பள்ளிச் சமையல் அறை கட்டுதல் போன்றவை இதில் உள்ளடங்கும். தேசிய கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு 488 வேலைகள் ரூ. 1.15 கோடி செலவில் செய்யப்படுகிறது.

தீவிர வேளாண்மைப் பெருக்குத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டில் 1,100 சிறு விவசாயிகளுக்கு ரூ. 1.5 கோடி கடனாக வழங்கப்படுகிறது. இந்த ஆண்டில் மட்டும் ஆதிதிராவிடர்களுக்கு 721 வீடுகள் கட்டித்தரப்படுகிறது.

இம்மாவட்டத்தில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1,000 பேருக்கு ரூ. 2.5 கோடி வழங்கப்படும். விவசாயக் கடன் ரூ.11.22 கோடி வழங்கப்படுகிறது. தொழில் வளர்ச்சிக்கு ரூ. 7 கோடி செலவிடப்படுகிறது. போக்குவரத்து போன்ற சேவை நிறுவனங்களுக்கு ரூ. 1.79 கோடி செலவிடப்படும்.

இப்புதிய மாவட்டத்தில் ஆட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ. 71 இலட்சமும், சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு ரூ 17.75 இலட்சமும் அரசு அனுமதித்துள்ளது. புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் திறந்தவெளி அரங்கம் ஒன்று கட்ட ரூ. 50 இலட்சமும், உள் அரங்கம் ஒன்றுகட்ட ரூ. 33 இலட்சமும், நீச்சல்குளம் கட்ட ரூ. 19 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாவட்டம் முழுவதும் அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் வேகமாகச் செயல்பட்டு வருகின்றன. குடிநீர்த் திட்டம் இங்கு முக்கியமானது, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 80 குடிநீர்த் திட்டங்கள் ரூ. 25 கோடி செலவில் நிறைவேற்றப்படுகின்றன. மாவட்டம் முழுவதும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டங்கள் அனைத்தும் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும். இதற்குப் பிறகு குடி தண்ணீர்ப் பிரச்னையுள்ள கிராமங்களே இம்மாவட்டத்தில் இல்லை என்று கூறும் நிலை ஏற்படத்தான் போகிறது.

மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தித்துறை சார்பாக விருதுநகர் ஒன்றியத்தில் உள்ள வடமலைக்குறிச்சி, மேட்டூர் குண்டு, சத்திரரெட்டியப்பட்டி ஆகிய கிராமங்கள் ''எரிசக்திக் கிராமமாக'' மாற்றப்படும். இப்பணிக்கு இந்த ஆண்டு ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டப்படி இக்கிராமங்களில் சாண எரிவாயு அடுப்பு, சூரிய சக்தி அடுப்பு திறன் வாய்ந்த மண் அடுப்பு போன்றவை உருவாக்கி, ஒவ்வொரு கிராமமும் எரிசக்தியில் தன்னிறைவு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இராஜபாளையம் ஒன்றியத்தில் ரூ. 1 கோடி செலவில் ஆதிதிராவிடர்களுக்கென ''ஆதிதிராவிடர் கூட்டுவளர்ச்சித் திட்டம்'' என்ற பெயரில் செங்கல் சூளை, ஓடு தயாரித்தல், பாலீதீன் பைகள் தயாரித்தல் போன்ற தொழில்கள் தொடங்கப்பட்டு, ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் வேலை வாய்ப்பு அளிக்கப்படும். மிகவும் பின்தங்கிய ஒரு சமுதாயம் முன்னேற எடுக்கப்பட்டுள்ள நல்வழிகளுள் இதுவும் ஒன்று.



# பருத்திக்கு ஒரு புதிய எதிரி!

தமிழ்நாட்டில் பருத்தியை அசுவனி இலைப்பேன், தத்துப்பூச்சி, காய்ப்புழுக்கள், தண்டும்கூன்வண்டு, ரோடீனியா போன்றவை தாக்கி சேதம் விளைவித்து வந்திருந்தாலும், பெலீசீநாடபாசி எனப்படும் வெள்ளை ஈ இதுவரை ஒரு பிரச்சினையாக இருந்ததே இல்லை. ஆனால் 1985ஆம் ஆண்டு கோடை பருவ பருத்தியில் தமிழகத்தில் ஒருசில மாவட்டங்களிலும், குறிப்பாக சேலம் மாவட்டத்தில் எல்.ஆர்.ஏ.5166, எம்.சி.யூ.5 ஆகிய இரு ரகங்களில் வெள்ளை ஈ திடீரெனத் தோன்றியது.

எஸ். ஜெயராஜ்
ஜி சாந்தாராம்
ஏ. வி. ரங்கராஜன்
பயிர்ப்பாதுகாப்பு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3

இந்தப் பூச்சி அந்த இரு ரகங்களிலும் விதைத்த 100 நாட்களுக்குப் பின்னர் ஒரு இலைக்கு 1-லிருந்து 60 வரை காணப்பட்டது. இந்த வெள்ளை ஈ ஏற்கெனவே புகையிலை, பயறு வகைகள், மரவள்ளிக் கிழங்கு, வெண்டை, மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற பல பயிர்களில் வைரஸ் எனப்படும் நச்சுயிரிகளைப் பரப்பும் ஒருபூச்சியாக அறியப்பட்டிருந்தது. ஆனால் பருத்தியில் இப்பூச்சி சேதம் விளைவிக்கும் அளவில் தற்போது தோன்றியிருப்பது ஒரு பிரச்னைக்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இப்பூச்சியை மிகக் கவனமாகக் கண்காணித்துப் பெருகுவதைத் தடுக்கவேண்டியது அவசியம்.

இந்த வெள்ளை ஈ முதன்முதலாக, 1889ஆம் ஆண்டு, கிரேக்க நாட்டில் கண்டறியப்பட்டது. இது வெப்ப மண்டலத்திலுள்ள தென் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, மேற்கு ஆசிய நாடுகள், இந்தியா, ஸ்ரீலங்கா, பிரேசில், தென்மேற்கு அமெரிக்கா போன்ற பகுதிகளிலும் மேலும் ஒரு சில நாடுகளிலும் பல பயிர்களைத் தாக்குகிறது.

**பருத்தியில் தாக்குதலின் அறிகுறிகள்**

மிகுந்த அளவில் வெள்ளை ஈ தாக்கப்பட்ட பருத்திச் செடிகளிலிருந்து இலைகளும், சப்பைகளும், சிறுகாய்களும் உதிரும். முதிரும் காய்கள் சரியாக வெடிக்காது. பஞ்சின் தரமும், மகசூலும் குறையும். வெள்ளை ஈயும், அதன் குஞ்சுகளும் இலைகளின் அடிப்பகுதியில் இருந்து கொண்டு பயிர்ச் சாற்றினை உறிஞ்சி மேற்கூறிய சேதங்களை உண்டாக்குகின்றன. மேலும், வெள்ளை ஈயின் கருப்பட்டி பாகு போன்ற கழிவு கீழே இருக்கும் இலைகளின் மீது பனித்துளிகள் போன்று விழ, அதன் மீது கரும்பூசனம் படர்ந்து ஒளிச்சேர்க்கை தடைப்படுகிறது. இனிப்பான கருப்பட்டி பாகு போன்ற கழிவு எறும்புகளை ஈர்ப்பதால் வெள்ளை ஈ தாக்கிய செடிகளின் மீது எறும்புகள் ஊர்வதைக் காணலாம். பருத்தி பயிரிடப்படும் வேறு சில நாடுகளில் இந்த வெள்ளை ஈ இலைச்சுருள் போன்ற நச்சுயிரி நோய்களைப் பரப்புகிறது.

**வாழ்க்கை முறை**

ஒரு பெண் வெள்ளை ஈ 120 முட்டைகள் வரை இடக்கூடிய திறன் உடையதாகக் கண்டறிந்து இருந்தாலும், சராசரியாக 28லிருந்து 43 முட்டைகள் இடும். காம்பும் நீள்வட்டமும் மஞ்சள் நிறமும் உடைய முட்டைகள் இலைகளின் அடிப்பகுதியில் இடப்படுகின்றன. பெண் ஈ 2லிருந்து 18 நாட்கள் வரை முட்-




## திருமதி இந்திரா காந்தி

## அஞ்சல் தலை

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டி, அஞ்சல் துறை 31.10.85 அன்று வெளியிட்ட சிறப்பு அஞ்சல் தலை.

டைகள் இடும். கோடையில் முட்டையி லிருந்து குஞ்சுகள் பொரிக்க 3லிருந்து 5நாட் களும், குளிர்காலத்தில் 33 நாட்களும் ஆகும். முட்டையிலிருந்து பொரித்து வெளிவரும் முதல் நிலைக்குஞ்சு மஞ்சள் கலந்த வெண்மை நிறத்தில் இருக்கும். இது இலையின் அடிப் பகுதியில் இங்கும் அங்கும் அலைந்து கொண் டிருக்கும். இரண்டாவது மூன்றாவது நிலைக் குஞ்சுகள் இலைகளின் அடிப்பகுதியில் சலன மற்று ஒட்டிக்கொண்டு பயிர்ச் சாற்றினை உறிஞ்சி வாழ்கின்றன.

குஞ்சுப்பருவம் கோடையில் 9லிருந்து 14 நாட்களும், குளிர் காலத்தில் 17லிருந்து 77 நாட்களும் நீடிக்கும். குஞ்சுப் பருவத்தில் மும்முறை சட்டை உரித்து வளரும். நான்கா வது நிலை குஞ்சுப்பருவம் கட்டுப் பூச்சி நிலையை அடைகிறது. இந்த நிலை 2லிருந்து 8 நாட்கள் நீடிக்கும். கூட்டுப்பூச்சிப் பருவத்தி லிருந்து வெளிவரும் முழு வளர்ச்சி பெற்ற ஈ கோடையில் 5 நாட்களும் குளிர்காலத்தில் 24 நாட்களும் வாழும். ஒவ்வொரு பகுதியிலும் நிலவும் வெப்ப நிலை வெள்ளை ஈயின் வளர்ச்சி நாட்களை நிர்ணயிக்கிறது.

இந்தியாவில் ஒரு ஆண்டில் 12 தலை முறை உருவாக்கக்கூடிய வாய்ப்பு இருப்ப தால், வெள்ளை ஈ ஆண்டு முழுவதும் காணப் கிறது. பருத்தியில் இளம் தளிர்களைவிட முதிர்ந்த இலைகளையே வெள்ளை ஈ அதிகம் தாக்கிச் சேதம் விளைவிக்கிறது.

**மாற்று உணவுப்பயிர்களும், செடிகளும், களைகளும்**

வெள்ளை ஈ, மிளகாய், புகையிலை, கத்தரி, தக்காளி, உருளைக்கிழங்கு, சூரிய காந்தி, குசும்பா, முட்டைக்கோசு, பூக்கோசு, டர்னிப், கடுகு, மரவள்ளிக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, பல பயிறுவகைகள், கொத்த மல்லி, பூசனி வகைகள், வெண்டை, பருத்தி போன்ற பல பயிர்களைத் தாக்கி, உண்டு வாழக்கூடியது. இவை தவிர, ஊமத்தை, கண் டங்கத்தரி, நாயுருவி, துத்திபோன்ற பல களைகளிலும் வெள்ளை ஈ வாழும் திறன் கொண்டிருப்பதால், பயிரிடப்படும் பயிர் களுக்கு எப்பொழுதும் பரவக்கூடிய சாதக மான ஒரு சூழ்நிலை இப்பூச்சிக்கு உள்ளது.

**எதிரி உயிரினங்கள்**

உலகம் முழுவதும் வெள்ளை ஈக்கு 18 வகை ஒட்டுண்ணிகளும் 13 வகை ஊன் உண் ணும் எதிரிகளும் இருப்பது கண்டறியப்பட் டுள்ளது. இந்தியாவின் ஒரு சில பொரி வண்டு களும், குள்ளாம் பூச்சிகளும் வெள்ளை ஈயி னைப் பல பருவங்களில் தாக்கி, உண்டு, 33 சதவீதம் பகை எண்ணிக்கையைக் குறைக்க வல்லவை.

**வெள்ளை ஈயினை நிர்வகிக்கும் முறைகள்**

வெள்ளை ஈயின் எண்ணிக்கை பெருகி பருத்தியில் சேதம் விளையாதிருக்க, உதவக் கூடிய உத்திகளாவன:—

* பருத்தி பயிரிடக்கூடிய பகுதிகளில் ஆண் டுக்கு ஒரே ஒருமுறை குளிர்காலத்திலோ, கோடைக்காலத்திலோ பயிரிடுதல்.

* பருத்தி பயிரிடுவதற்கு முன்போ, பின்போ பயிர் சுழற்சியில் வெள்ளை ஈக்கு உணவாக அமையாத மாற்றுப்பயிர், பயிரிட்டு ஈயின் எண்ணிக்கை பெருகாமல் தடுத்திடுதல்.

* பருத்தி பயிரிடும் வயலிலும், அதைச் சுற்றி லும் வெள்ளை ஈக்கு உணவாக களைச் செடி களை அகற்றி துப்புரவாக வைத்திருத்தல்.

* பருத்திப் பயிருக்கு அருகில், வெள்ளை ஈக்கு உணவாக அமையக்கூடிய பயிர்களை இயன்ற அளவு பயிரிடாமல், மாற்றுப்பயிர் பயிரிடுதல்.

* அளவுக்கு அதிகமாக நீர்ப்பாய்ச்சுதலை யும், மிகுந்த தழைச்சத்து உரமிடுதலையும் தவிர்த்திடுதல்.

* கிரீஸ், அல்லது வாசலின் தடவிய மஞ்சள் நிற அட்டைகளை பருத்திப் பயிரில் உயரத் திற்குக் கட்டியும் மஞ்சள் நிற பிளாஸ்டிக் தட் டுகளில் நீர் நிரப்பி வைத்தும் வெள்ளைஈயின் நடமாட்டத்தைக் கண்காணித்தல்.




மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் ஓராண்டு நினைவு நாளினை யொட்டி, அவருடைய திருவுருவப்படம் 1.11.85 'தமிழரசு' இதழை அலங்கரித்தது இந்தப்படம் தஞ்சையில் 16.9.84-ல் நடைபெற்ற ராஜராஜ சோழன் 1000-மாவது ஆண்டு முடிசூட்டு விழா வில் கலந்து கொண்டபோது எடுத்தது.

## பார்த்தோம் - படித்தோம்:

# வண்ண முகப்பு கண்ணைக் கவர்ந்தது!

*1-10-85* 'தமிழரசு' இதழ் கண்டேன். பயனுள்ள செய்தி களை அருமையாகத் தொகுத் திருந்தீர்கள். முதல்வர் அவர் களின் வண்ணப்படங்கள் நன் றாக இருந்தன. பாராட்டுகள்!

**—எஸ். பி. சந்தானராஜகோபால்,**
நடுவகளப்பாள், மன்னார்குடி.

முதலமைச்சர் விருது வழங்கு விழா, திண்டுக்கல், ஆண்டி பட்டியில் முதல்வர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்பும், புகைப்படங்களும் அருமை. கண்ணைக் கவரும் முதல்வரின் வண்ண முகப்பும், நடுப்பக்கப் படங்களும் வெகு ஜோர்! *1-10-85* இதழ் படித்துப் பாதுகாக்கப்பட வேண்டியது.

**—க. சுவாமிநாதன். க. முருகன்'**
கரியணம்பட்டி'

நம் நாட்டுத் தந்தை காந்தி யடிகள்காண விரும்பிய இலட்சிய பூமியைக் கண்டோம்; அளவிலா மகிழ்வு கொண்டோம்— அடேங்கப்பா... ''கற்றாழை''க்கு இவ்வளவு மருத்துவச் சக்திகளா? வியப்புற்றோம்.

**—எம். பி. இளங்கோ,**
பி. மேட்டுப்பாளையம்.

ஆண்டிப்பட்டியின் ஆக்கப் பணிகளும், வளர்ச்சித் திட்டங் களும் விரைவில் ஆண்டிப் பட்டியை அரசர் பட்டியாக்கி விடும் என்பதில் சந்தேகமில்லை!

**—செந்தூர்மணியம்,**
திருச்செந்தூர்.

'தமிழரசு' இதழ் அரசு விழாக்கள் மற்றும் செய்திகளைச் சிறப்புடன் வெளியிட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக தமிழகக் காவல்துறைச் செய்திகள் சிறப்பு டன் வெளி வருகிறது:

**—பா. உமையணன்.**
இராமநாதபுரம்.

**'பார்த்தோம் — படித்தோம்' பகுதிக்குத் தங்கள் கருத்துக் களை எழுதும் வாசகர்கள், அஞ்சல் அட்டையில் மட்டும் எழுதினால் போதுமானது. அத் துடன் தங்கள் முழு முகவரியும் குறிப்பிட வேண்டும்.**

எழுத வேண்டிய முகவரி :

**ஆசிரியர்,**
**'தமிழரசு'**
**அரசினர் தோட்டம்,**
**சென்னை – 600 002.**

தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், ஆண்டிப் பட்டியில் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளை ''ஆண்டிப்பட்டி அரசர்பட்டி ஆகிறது'' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரை யின் மூலம் விவரமாகத் தெரிந்து கொண்டேன்.

**—சொ. முத்தமிழ்வாணன்'**
தஞ்சாவூர்'

*16.10.85* இதழில் மாண்புமிகு முதல்வரின் வண்ணப்படம் மனத் தைக் கவர்ந்தது. 'அறிவியல் சாளரம்' பகுதி அருமையாக வெளிவருகிறது. நடுப்பக்கத்தில் வெளிவந்த வன விலங்குகளின் படம் அழகாக உள்ளது.

**எம். பிரபாகரன்,**
திருமருகல்,
தஞ்சை மாவட்டம்.

1.11.85 இதழின், பளபளக்கும் வார்னீஷ் அட்டையின் தோற்றத் தைக் காணக் கண் கோடி வேண டும்! முதல்வரையும், ஏனைய அமைச்சர்களையும் நேரில் காண் பது போல, வண்ணத்தில் தத்ரூப மாய் வெளியிட்டு இதழுக்குப் பெருமை சேர்த்து விட்டீர்கள்.

**'குறிஞ்சி' வானொலி மன்றம்,**
கரியணம்பட்டி,
பண்ணைப்புரம் (அஞ்சல்),
மதுரை மாவட்டம்.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


Nalli
CHINNASAMI CHETTY
Panagal Park, Madras
OBM 9296

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23




வரப்புயர நீர் உயரும்,
நீர் உயர நெல் உயரும்,
தொழில் பெருக வளம் பெருகும்,
தொன்று தொட்டு தமிழகத்தில்,
புரட்சித்தலைவர்

**எம். ஜி. ஆர்** அவர்கள் ஆட்சியில்

டிட்கோ தொடர்ந்து புகழ்பெறும் வண்ணம்,
புதுப் புதுத் தொழில்கள் பெருக
பல திட்டங்கள் தீட்டி செயல்பட்டு வருகிறது.

டிட்கோ

ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழக அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002



DIPR/296/85/NAS